உ

ஸ்ரீ மஹாகணபதயே நம:

# திருக்குறள் விளக்கமென்னும்

# தென்கைலாய சதகம்.

இஃது

திருப்பத்தூர்

ஸ்ரீ சொரூபானந்த சபாவித்துவானும்

ஷையூர் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதருமாகிய

ஆ. க. குமாரசாமி முதலியார்

இயற்றியது.

புரோகிரஸிவ் பிரசில் அச்சிட்டது,

1912

சிவமயம்

ஸ்ரீ தாளபுர வாஸம்பொருந்திய ~~ஆதிசைவகுலஜ~~
ஸிரேஷ்ட்டரான பிரம்மஸ்ரீ அஷ்ட்டாவதானம்
ஞானசிவ முனீசுவர குருக்கள் குமாரரான
வேதாகபுராண சோதிட சாஸ்திர
ஆயுள்வேத பண்டிதருமான
சாமிகுருக்களால் இயற்றிய
சுலோகங்கள்.

---

కాశీసమానం కాంచీతి దక్షిణేవ ర్తతేపురః।
తత్పురంతు సురైర్నిత్యం సేవితంభక్తసంయుతం॥ ౧
తదుత్తరంసమారభ్య నారాయణవనంపరం।
దిండీశవనపర్యంతం కాంచీమండలముచ్యతే॥ ౨
సముద్రతీరమారభ్య మహాబలిపురాన్వితం।
విరించిపురపర్యంతం కాంచీభూదేశమండలం ॥ 3
పంచపంచాశదధికం త్రిశతంస్థలముత్తమం।
వర్తతేతత్రసంపూజ్యం శివస్థానంమహోత్తమం॥ ౪
విచిత్రకాననంచైవ జలాశయనదీకులం।
సమస్తసస్యసంపూర్ణం కేదారధరణీతలం॥ ౫
తన్మధ్యేవర్తతేదివ్యం పంచక్రోశంమహాస్థలం।
కాంచీపశ్చిమదిగ్భాగే శ్రీతాళతరుశోభితే॥ ౬

పురంక్షీరనదీతీరే వర్తతే మహదుత్తమం।
విలాసకాంచీనగరే శ్రీతాళతరుశోభితే॥ ౭

వ్యాఘ్రేణపూజితస్తస్మాత్ వ్యాఘ్రముఖ్యమహేశ్వరః।
ఇతినామ్నా పితస్త్రైవ సివసామిత్వయాసహ॥ ౮

ఏవంమమప్రియకరం శ్రీతాళపురముత్తమం।
ఇతిశంభువచశ్శ్రుత్వా పూర్వాంకైలాసమందిరాత్॥ ౯

వృషభేనయుతాదేవీ కాంచీక్షేత్రస్యపశ్చిమే।
పరంక్షీరనదీతీరే శివపూజాంవిధాయచ॥ ౧౦

మయూరరూపాదుత్సృష్టా దేవదేవదయావశాత్।
జ్ఞానప్రసూనపూర్ణత్వాత్ జ్ఞానాంబేతిప్రకీర్తితా॥ ౧౧

కాళహస్తిస్థలేనిత్యం జ్ఞానాంబాసహితశ్శివః।
కాళహస్తిస్థలేనిత్యం సర్వేషాంముక్తిదాయకం॥ ౧౨

శ్రీమద్దక్షిణకైలాసో భక్తానాంభుక్తిముక్తిదః।
కాళహస్తీశ్వరంలింగం తత్రాస్తిసురసేవితం॥ ౧౩

శ్రీమత్తాళపురంరమ్యం దర్శనాద్భుక్తిముక్తిదం।
ఆనందతాండవంకృత్వా తత్రాస్తే భగవాన్ శివః॥ ౧౪

జ్ఞానసూనాంబికాయుక్తః కాళహస్తీశ్వరప్రభుః।
కాశ్యాదిసర్వక్షేత్రాణా మధికంచోత్తమోత్తమం॥ ౧౫

కాళహస్తీశ్వరంలింగం దృష్ట్వాప్రాతఃసకృన్నరః।
చతుస్సముద్రపర్యంతం భూమిదానఫలంలభేత్॥ ౧౬

మధ్యాహ్నేతుసకృద్దృష్ట్వా శ్రీతాళనగరీశ్వరం।
సహస్రకపిలాదాన ఫలంప్రాప్నోతిమానవః॥ ౧౭

సాయాహ్నేతుసకృద్దృష్ట్వా జ్ఞానాంబానాయకంవిభుం।
గవాంకోటిప్రదానస్య ఫలంప్రాప్నోతిమానవః॥ ౧౮

అర్ధరాత్రౌసకృద్దృష్ట్వా శ్రీతాళపురనాయకం।
అశ్వమేధాదియజ్ఞానాం ఫలంప్రాప్నోతిమానవః॥ ౧౯

ప్రదక్షిణనమస్కార స్తోత్రాద్యైః సేవతేచయః।
సర్వపాపవినిర్ముక్త స్సదైశ్వర్యసమన్వితః॥ ౨౦

శ్రవణాద్ధర్మజంపుంసాం స్మరణాద్ధర్మసిద్ధిదం।
దర్శనాత్సర్వకామాంశ్చ శ్రీతాళపురముత్తమం॥ ౨౧

నిరంతరనివాసేన శివసాయుజ్యదంపరం।
మాహాత్మ్యశ్రవణాత్తస్య, దశజన్మార్జితంత్వఘం ౨౨

అవశ్యంవిలయంయాతి వహ్నినాతూలరాశివత్।
స్మరణాన్మూలలింగస్య పాతకంశతజన్మజం।
అవశ్యంనశ్యతిక్షిప్రం తమస్సూర్యోదయేయథా॥ ౨౩

కాళహస్తీశసేవార్థం గృహాన్నిష్క్రమణేకృతే।
సహస్రజన్మజనితం పాతకంతువినశ్యతి॥ ౨౪

ఏతత్సుగుణభూయిష్ఠా స్యాలయస్యతుధర్మకృత్।
విలాసకాంచీనగర కాళహస్తీశభక్తిమాన్॥ ౨౫

శాంతాంవంశసముద్రేందు ర్దేవబ్రాహ్మణభక్తిమాన్।
శివగోత్రోద్భవశ్శైవ శ్శైవాచారరతస్సదా॥ ౨౬

శాంతాంప్రభువరేణ్యస్య పుత్రష్షణ్ముఖనామకః।
తత్పుత్రశ్శేషనామేతి రామలింగస్తుతత్సుతః॥ ౨౭

ఇంగితజ్ఞోగుణగ్రాహీ సర్వసౌహార్దవాన్సుఖీ।
అదృష్టశాలీధాతాచ స్వభుజార్జితభాగ్యవాన్॥ ౨౮

కుసీదధనమూలేన లక్షలక్షార్జితఃప్రభుః।
జయత్యుత్కర్షశాలీచ సర్వధర్మరతస్సదా॥ ౨౯

శ్రీతాళపత్త్రనాధీశ కాళహస్తీశ్వరప్రభుః।
తత్పుత్రపౌత్రాభివృద్ధిం కుర్యాదాచంద్రతారకం॥ ౩౦

శ్రీరామలింగప్రభుణా ప్రార్థితస్సంచకారహి।
ద్రావిడ్యాభాషయోత్పాద్య కాళహస్తీశవైభవం॥ ౩౧

కైలాసశతకాఖ్యాతు కృతిస్సురచనాయుతా।
శైవాచారరతః శ్రీమత్ దశగ్రామనివాసినః॥ ౩౨

కుమారస్వామివిదుషా కృతా ద్రావిడభాషయా
సన్మదేరసపుష్టాస్తుగుణాలంకారశోభితా॥ ౩౩

ఇతిపరమరహస్యం దేవదేవైరవేద్యం।
పరమశివచరిత్రం పావనంపాపభంగం।
శ్రుతిపుటయుగళాభ్యాం శ్రావ్యకోశంవిలంఘ్యం।
పఠతిపరమభక్త్యా సఃపుమాన్ దేవతుల్యః॥ ౩౪

కైలాసాచలతుల్యరూపసహితా కాశీపురీసుందరీ।
తత్తుల్యాధరణీతలేవిజయతే కాంచీపురీకామదా।
తద్ధర్మేణసమన్వితంపురవరం శ్రీతాళవృక్షావృతం।
బ్రహ్మేంద్రాదిసురార్చితోజయతిమే శ్రీకాళహస్తిప్రభోః॥ ౩౫

శ్రీరామలింగప్రభుణా ప్రార్థితఃకవికుంజరః।
కైలాసశతకంచక్రే కుమారస్వామినామకః॥ ౩౬

అతిశయితానర్ఘ్యమణిః నవరసభరితాసుతుష్టిదా।
పఠతాం శ్రీదిశనగరీవిదుషః కృతిరియమత్యద్వితీయగుణనికరా॥ ౩౭

కుమారస్వామివిదుషా యాకృతిశ్చప్రకాశ్యతే।
సాకృతిఃసర్వసంమాన్యా భవత్యేవనసంశయః॥ ౩౮

---

# சிறப்புப்பாயிரம்.

திருப்பத்தூர் ஹைஸ்கூல் சமஸ்கிருத
பண்டிதரும் கெடாம்பி வித்துவானுமாகிய
ஸ்ரீமாந்
நரசிம்மாசாரியரியற்றிய சுலோகம்.

𑌰𑌮𑌯𑌤𑌿 𑌯𑌾 𑌸𑌤𑍍𑌪𑌦𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿
𑌪𑍍𑌰𑍌𑌢𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰 𑌭𑌾𑌵𑌗𑌮𑍍𑌭𑍀𑌰𑌾 ।
𑌸𑌰𑌸𑌾 𑌕𑌵𑌿𑌤𑌾 𑌵𑌿𑌬𑍁𑌧𑌾𑌞𑍍
𑌜𑌾𑌤𑌾 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 ॥ க

𑌜𑌯𑌤𑍁 𑌤𑌾𑌰𑌾𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣
𑌕𑍈𑌲𑌾𑌸 𑌶𑌤𑌕𑌯𑌾 𑌦𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 ।
𑌸𑍍𑌵𑌯𑌮𑌪𑌿 𑌜𑌨𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌚
𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌃 𑌶𑍍𑌰𑍀 𑌦𑌶𑌚𑌕𑍍𑌰𑌾𑌮𑍇 ॥ உ

ரமயதி யா சத்பதபாக்,
ப்ரௌடாலங்கார பாவகம்பீரா
சரசா கவிதா விபுதாந்
ஜாத ஹி ஸ்வாமிந: குமாரஸ்ய. க

ஜயது தராம் தக்ஷிண
கைலாஸ சதகயா தயாக்யாத:
ஸ்வயமபி ஜனகஸ்தஸ்யச
கந்தப்ப: ஸ்ரீதசக்ராமே.

குடியாத்தம் வையாபுரிஸ்வாமிகள் மடாதிபர்
ஸ்ரீலஸ்ரீ
யோகாநந்தஸ்வாமிகளியற்றிய சுலோகம்.

ஶ்ரீ[illegible] ஜாத:
[illegible] |
[illegible]
[illegible] நாகக: || க

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ஸம்யக் நிரீக்ஷித: || உ

[illegible] தக்ஷிண [illegible]
[illegible]
[illegible]
[illegible] || ௩

---

காஞ்சிப்புரம் பிள்ளையார்பாளையம் கச்சியாளவந்த
வள்ளலாராதீனம்
ஸ்ரீலஸ்ரீ
சிவசங்கரதேசிகரவர்களியற்றிய
இணைக்குறளாசிரியப்பா.

மணியறத்துபயம் வாய்ந்தவரீகையால்
வள்ளலாநீரார் மறங்கடிந்திருபாற்
பொருளோம்பனகர் புந்திவியந்தி[illegible]
தாரணைப்பொருளே யாமெனலல்லாற்

சங்கத்தலைவராஞ் சான்றாணிரம்ப
வதிரேகந்தரு மருந்தமிழாலா
முத்தர வேதஞ்
சொற்றபாவலன் றுவரிதழ்க்கமலத்
தவிசிறைசுருட்டுந் தடந்திரைவைப்பிற்
தெய்வப்புலமைத் தெரிப்பான்போந்த
திருவள்ளுவனார் தெருட்டதிகாரப்
பாசுரம்பத்தும் பனுவலொன்றில்
விளங்கமுன்னிலையாய் வேதமுணரா
தென்கைலாயச் சிலம்பகத்தேவை
யநவரதந்துதி யன்பன்சாந்தான்
இராமலிங்கநாம நிரீஇ
தனநிக்ஷேபந் தடாகமக்ராரம்
தண்டலையாலயஞ் சத்திரத்தாபனச்
சந்தானத்துட் டகைமையவாம்பிர
பந்தநிர்மாணம்
மிகையெனவுன்னா வியநிலத்தென்மொழி
யுள்ளனாளு மோங்கவெமக்கு
மமிதவாமோத மாமுறைச்
சொற்பொருணயவணி துலங்கநவின்றான்
உடலக்கண்ண னூர்திக்குறையுளாம்
பக்கிபார்ப்புடனுற பதியாம்பமரங்
கானம்பயிலுங் களகமாமின்சொற்
சுகசாலங்கட் சுவைத்தினிதருந்தும்
போனகசாலையாம் பொழிற்பத்தூரன்
மலயத்தவனான் மகிவந்துலவும்
பாடாந்தரத்துட் பஞ்சவிலக்கண

## சிறப்புப்பாயிரம்.

விலக்கியந்தெளிய விதயத்துணர்ந்த
வண்ணம்போதக மற்றுரைநூற்சொ
லாற்றலுற்றோ னதன்பயன்கொள்பாக்
சகக்கணிற்காண்டற் கானந்தங்கொளுங்
தொண்டர்பராவுஞ் சுத்தசிவத்தைப்
புறத்துமகத்தும் பூசனைபுரிதவன்
நந்தங்கந்த நாமநற்றவத்
தனையனுங்குமார சாமிநாவலனே.

---

திருவாலங்காட்டு கார்க்கோடகமடாதிபர்

ஸ்ரீலஸ்ரீ

நடராஜதேசிகரவர்களியற்றிய

**கட்டளைக்கலித்துறை.**

வனந்தடந்தெய்வப்பிரமாலயந்தனைவைப்புமட
மெனுஞ்செயற்கீர்த்தியடைந்தாரினும்பெறலீர்ம்ப்ரபந்த
தனந்தகக்கண்டனந்தென்கயிலாயசதகமுலாங்
கனம்பெறுஞ்சாந்தாணிராமலிங்கத்தவன்கைத்துதியே.

சத்தசந்தானத்துநித்தியநாவலர்சார்ப்ரபந்தம்
பெற்றசந்தானந்தழைகவென்றேயெணிப்பேசினனால்
விற்றசாந்தானம்பெறப்பாடினோர்பாடுவித்தவர்சீர்
பற்றசந்தானகுமாரசாமித்தமிழ்ப்பாவலனே.

---

சென்னைநகர் மகாவித்துவான் காஞ்சிப்புரம்

## இராமசாமி நாயடு அவர்கள்

இயற்றியது.

முக்கண்ணன் பனுவலுக்கும் குறைகூறு
மொருபுலவன் முனைந்தடைந்த
அக்கயிலைக் கொருசதகம் சாந்தா
ஸிராமலிங்க னன்புகாட்டி
தொக்கபுகழ் குலவுதிருப்பத்தூர்வாழ்
கவிவல்லோன் தூய்மைமிக்கோன்
எக்கவியும் இசைக்கவல குமாரசா
மிப்புலவனியம்பினனே.

---

திருமயிலை வித்துவான் மகா-ரா-ரா-ஸ்ரீ சண்முகம்பிள்ளை
யவர்கள் மாணுக்கரும், சென்னை வேப்பேரி எஸ். பி. ஜி.
ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய

## கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

இயற்றிய

### அறுசீர்க்கழில் நெடிலடி யாசிரியவிருத்தம்.

பூமேவு மொருபுல்வன் புவிமேவு
பெரும்புலவ னாகிப்போந்து
தேமேவு தென்மொழியின் நவின்றதொரு
மறைப்பொருளைத் தெள்ளிதாகக்
கோமேவு நுதற்பெருமா னமருந்தென்
கயிலாயக் குவட்டின்மீது
நாமேவுஞ் சதகநூல் வகுத்தட்டான்
கற்றோரும் நயப்பமாதோ (க)

அன்னவன் யாரெனின் வளஞ்சால் திருப்பத்தூர்
செய்தவமா யமர்ந்தோனும்
பன்னுமெழுந் றமிழ்ப்புலமை நடத்திடுவோன்
பன்னூலும் பரக்கவாய்ந்தோன்
மின்னுறுசெஞ் சடைப்பெரு மானடிமலர்க்கே
தொண்டுசெயும் விருப்புகொண்டோன்.
தன்னிகரில் குணமுடையான் குமாரசாமிப்
பெயர்கொள் தமிழ்வலோனே. (௨)

வலங்குலவு வரிவடிவின் தமிழருமை
யறியாத வன்கணாளர்
புலங்குலவ வந்திடினும் தவிர்த்தகல்வோன்
தனையடிப் புகுவார்தம்மை
நலங்குலவ வாதரிப்போன் சாந்தானிராமலிங்க
நரேந்த்ர னின்று
நிலங்குலவ வெளியிட்டுப் படைத்திட்டான்
பெருகீர்த்தி நிலவமாதோ. (௩)

---

சித்தாந்தசரபம் - அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

### பன்னிருசீர்க்கழில் நெடிலாசிரிய விருத்தம்.

தேத்தடைக ணனிகளுறந் துடவைசெறி
காளத்தித் தேவைப் போற்றிச்
திருக்குறளின் முதலிருபா லின்கருத்து
நனிபொருந்தத் தேனேர் சொற்கள்

எத்துறுகற் பனையலங் காரமா
 தியசுவைக ளினிது மேவ
வினியதென் கயிலாய சதகமென்
 றொருநூலை யெழிலிற் சொற்றான்
சோத்திரத்திற் குயர்விருந்தை யுஞற்றுதிருப்
 பத்தூராந் தொன்மை வைப்பிற்
றோன்றிநற் புகழ்வாய்ந்த கந்தப்பக்
 கோமான்றன் றோன்ற லாகிச்
சாத்திரமோ டிலக்கியவி லக்கணமொ
 ருங்குணர்ந்து தன்னே ரின்றித்
தங்குவிற் பனன்குமா ரச்சாமி
 நாவலனுஞ் சதுரன் றானே.

---

சத்தைமங்கலம் பொன்னம்பலப்பிள்ளையவர்கள் குமாரரும்

## பிரம்மஸ்ரீ, மாணிக்கவாசக சுவாமிகள்

ஆதீனவித்துவானுமாகிய

மகா-ரா-ரா-ஸ்ரீ,

## நல்லதம்பிப்பிள்ளை யவர்களியற்றிய,

### நேரிசையாசிரியப்பா.

திருவளர்சோலை செழித்து நீண்ட
திருப்பத்தூர்வாழ் சீர்புலவர்கடமி
லுழையமர்கரத்த னெண்சீரடிகளை
விழைவுடன்விரும்பு மெய்ம்மைசாலன்பன்
சங்கரன்பூசை நனைப்புரிநல்லோன்
துங்கமார்வேதத் தொன்முடிபுணர்ந்தோன்
கந்தப்பவேந்தல் கவினுறுதவத்தாற்
றந்தமைந்தனுங் குமாரசாமிச்

சூரியாகுந்துகடவிர் குணத்தோன்
காரினுன்ற கவிமழைசொரிகுயின்
இலக்கியவிலக்கண மிலகவுணர்ந்த
கலக்கமில்லா கவினுறுநெஞ்சன்
உத்தரவேதத் தொண்பொருள்விளங்க
புத்தமுதென்றிகம் புகழும்பொருடனைத்
தரணிக்கச்சளந் தனைநீக்குதல்போற்
றரணிவாழுஞ் சகலருமவித்தை
யிருடனை நீக்கிட வெளிதினிற்றமிழாற்
பொருணிறையாசிரி யத்தாற்பொலியுந்
தென்கை லாய சதக
மென்கையன்பி னியம்பினனினிதே.

---

ஐயன்பேட்டை மஹாவித்துவான்
வெப்பிரகாசையரவர்கள் மாணுக்கரும், பனைப்பாக்கம்
மொ. அம்பலத்தாடி முதலியார் குமாரருமாகிய
மகா-ரா-ரா-ஸ்ரீ,
நாராயணமுதலியாரவர்களாலியற்றிய

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருவாழ்கமலஞ் செங்கழுநீரோ
டொருவாவலிமல ரோங்குநீரோடைக்
கொண்டல்கண்படுக்குங் கோதறுகேதனம்
விண்டலமதனில் விளங்கும்புரிசைத்

நமாலந்தமாலந் தமாலமென்றஞ்சி
பமானமாங்கச்சக மலைந்துலைந்தேங்கிச்
சம்பையின்மையாற் சௌகந்திகமொரீஇ
பும்பரூர்தாவு முயர்தருசோலைசூழ்
விருப்பபற்றுரும் வியக்குஞ்சீர்சால்
தருப்பத்தூரிற் சிறந்தமர்வள்ளல்
நவவீரர்கள்குல நாயகமாகும்
பவமில்கந்தப்பன் பயந்தருட்குரிசில்
பூவார்பொதும்பரிற் புகுந்தளியினங்கள்
மாவார்பிரச மகிழ்ந்தினிதருந்தி
யினிக்கும்பாட லிசைக்கும்பனைச்
தனித்தலமதனிற் றுனெழுந்தருள்கா
ளத்தீசுரனு ரடியிணைபரவும்
பத்தியிற்சிறந்தோன் பாவலரிடுக்க
ணிராமலிங்கற்று மினியகுணனை
ளிராமலிங்க னெழிலுறுசீமான்
பாட்டுடைத்தலைவனும் பண்பினைக்கொண்டே
தேட்டமொடியற்றுந் தென்கயிலாயச்
சதகமதுந்தச் சகத்தவர்புகழ
இதமுடனிலக்கிய மிலக்கணமியாவுந்
தெளிதருதிறத்தாற் சீரம்புவியினி
லளிகொளும்ஞான வற்புதமடைந்த
பெரியோர்சொல்லைப் பேணுதல்கடனெனப்
பரியாலோசனைப் பண்ணிவள்ளுவர்சொற்
குறளுரையடக்கிக் கோற்றேனதனிற்
திறமுறமுக்கனிச் சீனிகற்கண்டை
யிட்டிழைத்ததென வினித்திடவிசைத்தான்
சட்டமார்குமார சாமிநாவலனே.

ஐயன்பேட்டை மஹாவித்வான்
சிவப்பிரகாசையரவர்கள் மாணாக்கரும்
பனைப்பாக்கம் கண்டிமுதலியார் குமாரருமாகிய
மகா-ள-ள-ஸ்ரீ

## எல்லப்பமுதலியாரவர்களாலியற்றிய

### எழுசீர்க்கழில் நெடிலடியாசிரிய விருத்தம்.

எழிலிகண்டுஞ்சரணி காவல்பதூரில்வா
ழேந்தல் செங்குந்தமரபி
லெழுமிந்துசேகர னுபயவடிதினந்துதிசெய்
யெழிற்குமர சாமிசம்பு
கழிபெருங்குறட்கட லினைத்தாலுகிரியிற்
கடைந்தவின் னமிழ்தமாந்தென்
கைலாயசதகநூற் கண்டகமகிழ்ந்திடுங்
கலைவலோ ருன்னியுன்னிப்
பழிபிலாநல்லுணர்வெனுஞ் சுடர்கொளுந்துநூல்
பஞ்சமகதிக் கேற்றுநூல்
படிறருள்ளக்கூனகற் றெற்றுநூல்ஞானப்
பண்பெறுநன்மணி கோக்குநூல்
இழிபிலாமங்கலம தென்னுமாங்கல்லியக்
கேற்குநூல் கவிபொருந்த
ரின்புடன்கொளுநூலென் றவ்வவர்கருத்தள
வியம்பிட விருந்தனவரோ.

தருமபுரியைச்சார்ந்த குமாரசாமிப்பேட்டை
மகா-ரா-ரா-ஸ்ரீ பச்சையப்பமுதலியார் குமாரர்

## தணிகாசலமுதலியாரவர்களியற்றிய

### கட்டளைக் கலித்துறை.

பொன்முகமென்ன கலைகட்கறிவிற்கு போதமென்ன
மன்முகப்பானகுங் கண்களெனத்திரு வள்ளுவனார்
தன்முகமென்ன விளங்குங்குமார சுவாமிகவி
நன்முகத்தென் கயிலாயசதகத்து ணந்தமக்கே.

---

திருமழிசை, மகா-ரா-ரா-ஸ்ரீ
கனகசபை உடையார் குமாரர்

## பச்சையப்ப உடையா ரவர்களியற்றிய

### நேரிசை வெண்பா.

சொல்வான்மணியுட் பொருளாற்சுடர்விளக்க
நல்லார்க்குவப்புநடையிலயம்—வில்லணியாற்
பொன்கயிலியாமாற் குமாரசாமிப்புலவன்
றென்கயிலாய சதகம்.

---

காஞ்சிப்புரம் மகா-ரா-ரா-ஸ்ரீ ஐயங்குளம்

## நாராயணசாமி முதலியாரவர்கள்

இயற்றியது.

### எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

சண்பையர்கோன்குலச்சிறைமங்கையர்க்கரசியிவரைத்
தனிப்பதிகத்தோரி டத்துங்கம்பனஞ்சீராமன்
விண்பரவுசரிதத்துஞ் சடையனைப்பொற்களந்தை
வித்வனள சரிதத்த ரிச்சந்த்ரன்சுவர்க்கி

நண்பையாயிரத்து நூற்றிடத்திருக்கக்கண்டா
நங்குமாரசாமியெனும் பாவாணன்சொற்ற
தென்கைலைசதகத்தோ சாந்தனிராமலிங்கச்
செம்மலெங்குமுளனவன்றன் செய்தவங்களென்றே.


---

சென்னை புரோகிரசிவ் பிரஸ் தலைவர்

பு. வை. சபாபதி முதலியாரவர்கள்

இயற்றியது.

கான்மணக்கு நறுங்கொன்றை கவின்மணக்குந்
தென்கயிலைக் கறைக்கண்டற்கே
தேன்மணக்கு நறுந்தொடையாச் செய்திட்டான்
தென்கயிலைச் சதகமென்னும்
வான்மணக்குந் திருக்குறளின் பொருள்சாந்தான்
இராமலிங்க வள்ளல்கேட்ப
வேன்மணக்குங் கரற்கன்பன் குமாரசாமிப்
பெயர்கொள் மேதக்கோனே.



ஸ்ரீ காளத்தி.

உ

ஸ்ரீ மஹாகணபதயேநம:

வேலுமயிலுந்துணை.

## திருக்குறள் விளக்கமென்னும்

# தென்கைலாய சதகம்.

---

### விநாயகர் காப்பு.

#### நேரிசைவெண்பா.

கரணவர ணங்கடந்து கண்ணுதலோன் முத்தி
சரணகம லாலயத்தைச் சார்ந்தார்—பிரணவமே
தஞ்சந்தி யானை யெனலாற் சதாநினைப்பாம்
அஞ்சந்தி யானை யடி.

### சிவம்.

அமுதகிரணக்கலைக ளீரெட்டுமாகியோ
ராயிரங் கதிருமாகி
யங்கியெழுநாவாகி சகசீவபரவுயிர்க
ளாக்குமணி தீபமாகி
நமமுதலவெழுகோடி மந்திரசொரூபமாய்
நாதமாய் விந்துமாகி
ஞானமயவடிவாகி குணமூர்த்தமாகிகுண
ரகிதமாய்ப் பரிபாகருட்

சமதமாதிக்குண நிறைந்ததாயத்துவித
சாரமாய்ப் பேரின்பமாய்ச்
சத்தாகிசதசத்து மாய்ச்சச்சிதாநந்த
சாந்தமாய்ச் சுப்ரமணியாய்த்
தமரவாரணமுடிவி ளங்கியசிவோகமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (க)

காளத்திநாதர்.

சிலைவடநிழற்கணு கமவாசனத்தவஞ்
செல்வவாற்றாரிடை
சிந்திதமனோத மளித்தகருணாகர
சிலந்திமா காளிமணிமான்
கலைமகள்வசிட்டனு ரணனாணன்றுர்க்கை
கண்ணப்ப னதிசேடன்
காளிந்திரனரிச் சந்த்ரனர்ச்சுனனியானை
கௌசிகன் சித்ரசேனன்
வலவனக்கீரனக் கினிபிரமன்சனகாதி
மாதவர்கள் சிவகோசரி
மாயூரமணிகங்கை பொன்முகிறிமாகாளி
வச்ரதீர்த்தம் படிந்தே
தலைகூவிளம்பறித் தர்ச்சிக்கவருள்பரம
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உ)

பூரணபுராதனு பச்சிமதுவாரம்
        பொருந்துசின கரவாசவம்
புத்தலரெடுத்திடு கரத்தாதிசைவநவ
        பூசுரர்களாதி மறையால்
காரணசிவாகம விதிப்பூசனைக்கொளுங்
        கண்ணுதால் வடமடமணி
கங்கைமடமம்பரத் வாசமடமூவறு
        கணத்தமட முடைய நகரோய்
சீரணவுமாறுகொத் தாறெட்டுகொத்திளையர்
        சிட்டராமன் கணக்கர்
திருத்தொண்டுபூண்டொழுகி வலமாகிதெரிசிக்க
        தெற்குவா யிற்றந்தவா
தாரணபகீரதி ததும்புருணவேணியா
        சாந்தாணி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
        சாமிதென் கைலாயனே. (௩)

## சைவசமையாசாரியர்கள்.

ஆளுடையநம்பியரசுப்பிள்ளையெனுமூவர்
        ஆர்வமிக் குருகியுருகி
அந்தமிழ்வேதத்து சந்தமாரகிலெனு
        வரியவிற் றாணென்றெனு
காழுடையசெண்டாடு விடையெனு நக்கீரர்
        கைலையிது பாதியென்று
கல்லாடர்கண்ணப்பர் திருமறமெனுச்சொலுங்
        கவிவாணர் மெய்யன்பெனுங்

கேளுடையபத்திவலை யிற்படும்புனிதக்
கிரீசனே வெண்பொனிடபக்
கேதனுஞானபூங் கோதையிடமானவா
கேடிலா முத்தியுதவுந்
தாளுடையமாணிக்க சோதிவேதண்டமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௪)

சுப்பிரமணியர்.

பூமேவகண்டபரி பூரணசதாநந்த
புனிதகன சித்விலாச
போதபரஞானபத சங்கரவனுதிசிவ
புத்ரநவ ரத்னதீபன்
மாமேவுதேஜோ மயச்சுப்ர தீபன்மகிழ்
வனவள்ளி யம்மைநேசன்
வனசமுறுசரவண தபோத்பவன்சண்முகன்
மயிலூர்ந் தெழுந்தவரதன்
தேமேவுசெங்கடம் பணிபுயனயிற்கரன்
சேவலந் துவசவிஜயன்
செய்யநவ வீரரணி சங்கநாயகன்மலைத்
தெய்வமெய் யன்பர்வேண்ட
தாமேபயந்தருத லங்கிநயனத்தனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே, (௫)

## பாட்டுடையன்பன்.

கனநலமுறுந்தொண்ட நாடுநலனம்பனைச
காண்டக நலன்பார்ப்பதி
கானூபுரத்துவரு செங்குந்த குலநலன்
கருமநலனொன்றிலா
மனநலன்சிவபத்தி தாதைமுதாதைவழி
வழிநலன் மாறுகருதா
வகைமானவர்க்குதவு செயனலனுபசாந்த
மதிகுணநலன் னேசமா
மினநலன்னன்மக்க ளாபரணமனைநல
னீகையினு மேகநிகர
வின்சொலானனிநலன் றவவிரதகதிநல
னீட்டுநல்வினையி லுண்டாந்
தனநலனெனப்பரவி யுலகெலா மாசிசொற்
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௬)

## நூல்

### கடவுள் வாழ்த்து.

அகரமுதல வெழுத்தெலா மிந்தவுலகநம
 தாதிபகவன் முதற்றே
யாமென்றுகற்றதா லாயபயனவனடிக
 ளன்பொடு வணங்கியழியாச்
சிகரவடிவாய்ச்சனன விடரெலாநீங்கவெழு
 திருவுருவிரும்பி வினைகள்
தீர்ந்தவனொழுக்கநின் றகவிருளொழித்தமல
 சிற்சுகம தாவதழகாம்
பகருமைம்பொறிபோ லவன்றனிறைஞ்சிலார்
 பயனற்றிருந்து முடியாப்
பவசாகரங்கடக் கார்கடப்பாரவன்
 பதநினைப்போ ரென்பர்காண்
சகலபுவனத்தினு நிறைந்தருளநாதியே
 சாந்தாணி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
 சாமிதென் கைலாயனே. (க)

### வான் சிறப்பு.

வாழையடிவாழையென வுலகுயிரிருந்தோங்க
 வைத்தலும் மகிழ்தென்றலும்
மகிதலம்போந்துதா னுணவாகியுணவாக்கி
 மன்னுயிர்க் குணவூட்டலும்
மேழியை நடாத்தலும் புற்றலைவளர்த்தலும்
 வேலைமிகு வளமாக்கலும்
விண்ணவர்க்காம் பூசை விழவொடுநடத்தலும்
 வேந்தர்செங்கோ லோங்கலும்

ஏழையாங்குடிநாடு பொன்னுடெனப்போக
    வின்பம் பொசிப்பித்தலும்
இன்றியமையாப்பெருந் தகைமையாமகிமைபெறும்
    *எழிலிதன் றுணையென்பர்காண்
தாழுமடியார்க்கருள் சதோதய விலாசமே
    சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (உ)

நீத்தார் பெருமை.

வேதவிதிநிற்பார்கள் வேதங்களெல்லாம்
    விதிக்குமளவிற் கடங்கார்
விண்ணுலகுமண்ணுலகு மேத்துபுகழார்பஞ்ச
    விடயங்கடந்து நிற்பார்
வாதமறியார்சமய பேதமறியாரொரு
    மனோலய விளக்கமுள்ளார்
மகவானையாயிரங் கண்ணுளனுக்குவார்
    மண்ணுதி தத்துவமெலா
நேதிசெய்வாருள்ள படியேயிருந்தநிலை
    நிற்பருப சாந்தமுள்ளார்
நேசமாய்ச்சீவர்பா லருளேநிறைந்துளார்
    நீத்தாரெனப் புகல்வர்காண்
†தாதகியிலம்பக நிலாநிலவுவேணியாய்
    சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (௩)

---

* எழிலிதன் றெழிலெனினுமமையும்.
† தாதகியிலம்பகம் = ஆத்திமாலை.

## அறன்வலியுறுத்தல்.

தானமென்றாரண முரைப்பதேதேதுநாள்
தன்னுடன் வருவதேது
சாரமூக்காறவா வெகுளியின்னாச்சொலுந்
தாங்காதிருந்ததேது
வானுலகவின்பந் தருந்துங்கமானதெது
மனமாசறுப்பதேது
மன்னுயிர்ப்பாவமொடு சனனமுமறுக்கின்ற
வாறென்று சொல்வதேது
ஞானமொடு மோக்கமும் வருகின்றவழியேது
நலமென்று நாடலேது
நவிலின்பதுன்பத் திடைக்கண்டதேததே
நல்லறமெனப் புகல்வர்காண்
* சானகமெனத்திகிரி யேந்தியபினாகியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௪)

## அறத்துப்பால் இல்லறவியல்.

### இல்வாழ்க்கை.

மாப்புயனடந்துவர நல்ல துணையானதும்
மாதவர்க் குற்றதுணையும்
வானவர் மனங்களித் தவிமடுத்துண்ணவரு
மகமுதற் கானதுணையும்
பூப்புயமெடுத்தரசு புரிகின்றமன்னர்க்கு
போந்தினிமையான துணையும்
புண்ணிய மெனப்புகலு நன்னிலமெலாங்கண்டு
போற்றுமின் பானதுணையும்

---

* சானகம் = வில். திகிரி = மலை.

ஏற்பவர் விருந்தினர் துறந்தவர்கள் கைப்பொரு
ளிலாதவர்கள் தென்புலத்தார்
இனத்தவர்கலைக்யான விரதியர்க்கானதுணை
இல்லறமெ னப்புகல்வர்காண்
தாப்*பிணையனற்கர தலத்தமர்விநோதனை
சாந்தாணி ராமலிங்கன்.
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫)

## வாழ்க்கைத்துணைநலம்.

பெற்றதாயென்னவன மூட்டுதயை யுடையளாய்ப்
பிரியமிக் குடையளாகிப்
பிரசவலர்மேன்மங்கை யழகுடையளாய்விலைப்
பெண்சயன முடையளாகி
† அற்றந்தெரிந்துரை யமைச்சனறிவுடையளாய்
அவனியிற் பொறையுடையளாய்
அமுதரையுமேவல்கொளு நெறியளாய்நன்மக்க
ளாபரண முடையளாகி
சொற்றவறிலாதகற் புடையளாய்மடைவிதி
துலங்கத்தெரிந்துடையளாய்த்
துணைவனுக்கடியளாய்ப் பணிவளேல் வாழ்க்கைத்
துணைநலமெ னப்புகல்வர்காண்
சற்றருள்விலோசனத் தின்பமருளீசனை
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (௬)

---

* பிணை = மான். † அற்றம் — சமயம்.

## புதல்வரைப் பெறுதல்.

அம்புவியிவன்றாதை செய்ததவமேதென்ன
அதிசயந் தந்தபிள்ளை
ஆசையாய்ப்பெற்றவர்க் கேவாமலேவல்செய்
யருமருந் தனையபிள்ளை
இன்புதவு தவமென்ன பொருளென்னவிசையென்ன
ஈன்றாளு வந்தபிள்ளை
இருபத்துநாலாண்டில் பாலசூரியனென
வெழுந்துதய மானபிள்ளை
பின்புரைமறு துநற் புத்தியான்மிக்குடை
பெருந்தகைமை யானபிள்ளை
பேறுபதினாறினற் பேறென்ன மாறிலாப்
பிள்ளைநற் பிள்ளையென்பார்
தன்பெருமையறியாத பண்புடைய சோதியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எ)

## அன்புடைமை.

தயவினல்வாடிய முகம்பார்த்து விழிநீர்த்
ததும்புமா நேசமுடைமை
தசையலாலென்பும் பிறர்க்கீயவுண்டாய
சடமுடைமை யாசையுடைமை
நயமுடையசொல்லினே டினியமொழிகூறருள
நல்லகுண முடைமைமேன்மை
ஞாலத்துதித்ததி விருந்தபயனீதென்ன
நாடிப்பு ரிந்தமகிமை

வயமடையவெவரொடுந் தண்ணியமொழிப்பேசு
வாய்மைமதி வந்தநன்மை
வானகத்தருமதே வதையெலாம்புகழவரு
வாழ்க்கையன் புடைமையென்பர்
சயவட்ட வீரஞ்செலுத்தியவிஜேதனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அ)

## விருந்தோம்பல்.

திருவந்துசேரவும் வாழ்வுமிக்கோங்கவும்
செய்துவரு தொழில்களெல்லாம்
செயமாகிநிலநீர் வளத்திறற்பொங்கிவளர்
செந்நெலைப் போற்பெருகவும்
தருவந்தவானுலக வின்பத்தைமறுமையில்
தமரோடிருந் துண்ணவும்
தனமுளார்முன்னமிகு தனமுளாராகவே
சார்ந்துசந் தோடமுறவும்
வெருவந்தசொல்லாது நல்லவசனங்கூறி
வேள்வியிது நல்லதென்றே
மிகுமுகமலர்ச்சியா யுபசரித்தூட்டுவார்
விருந்தோம்பு வாரென்பர்காண்
சருவந்தனக்குருவ மாகிவளர்குருவனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (கூ)

## இனியவை கூறல்.

அன்பொடு கலந்துவஞ் சனையொன் றுமில்லா
தறைந்தற முணர்ந்தமொழியும்
அமுதகிரணஞ்சந்த்ர கலை நின்றெழுந்ததென
ஆசையா யோதுமெழியும்
துன்பொடுபவந்தேய விம்மைமறுமைச்சுகந்
தோன்றப்புகன்ற மொழியும்
துக்கமுடையவரெலா மிக்கவானந்தந்
துலங்கப்புகன்ற. மொழியும்
இன்பொடுமகிழ்ந்தவர்க் கின்பமென் மேனுமெழ
வேத்தித்து தித்தமொழியும்
ஈதலினநந்தமென் றுலகம்புகழ்ந்தமொழி
இனியமெழியாகு மென்பார்
தன்புகழிலங்கவிளை யாடியவிளைதனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௰)

## செய்ந்நன்றி யறிதல்.

முன்னுதவிவேண்டாம லவனுதவிவேண்டாது
முழுநன்றி செய்தபெரியோன்
மூவுலகளித்தாலு மீடாதலரிதென்ன
முன்னுகாலத் துதவினேன்
மன்னுலகினும்பெரிய தோரேழுகடலினு
மகத்தாகு மதனையொருவர்
வகுக்கவொண்ணாதது மறந்துவிடலாகாது
வருமெழுபிறப்பு மன்னன்

சென்னலமெனப்பேசி யுலகெலாமாசிமொழி
செப்பச்செனித்த முதியோன்
தீயசெயலில்லாத நேயமொழியுடையனே
செய்ந்நன்றி யறிவனென்பார்
* சன்னிபமிலாதசிவ சங்கரசுயம்புவே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கக)

நடுநிலைமை.

பண்புடைமனப்பெரிய ரணியென்னவணியப்
புறந்தபுக ழானநிலையும்
பாவந்தராவர விருந்துபிறராக்கம்
பறிக்கா திருந்தநிலையும்
வின்பரவுநடையா னடந்துதம்மக்களை
மேன்மக்க ளாக்குநிலையும்
மேதினியெலாந்தமது மக்களாலிவர்தந்தை
மிக்கென்ன வாழ்ந்தநிலையும்
நண்பினர்களயலார் பகைத்தவரிடத்துமொரு
நாட்டமா யுள்ளநிலையும்
ஞாலமொருகுறைசொலா துள்ளபடிநின்றநிலை
நடுநிலைமை யாமென்பர்காண்
† சண்பையர்மணத்தொளி ததும்புபரமுத்தனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கஉ)

* சன்னிபம் = ஒப்பு † சண்பையர் = திருஞான சம்பந்தர்.

## அடக்கமுடைமை.

நாவினால்மனதினால் காயத்தினாற்றீமை
நாடாதி ருக்கின்றதும்
நரகஞ்செலற்கஞ்சி தெய்வலோகஞ்செல்ல
நல்லவழி நோக்குமதியும்
தேவநோக்கந்தனக் காகவேகோபத்தை
செல்லிடங் காக்கின்றதும்
தீச்சொலாம்புண்ணென்று மாறாதெனப்புந்தி
தேறிமகிழ் வாகின்றதும்
ஆவியாமைந்துறுப் புள்ளேயடக்குமோ
ராமைபோ னிற்கின்றதும்
அசலமாயோங்குபுகழ் நீங்காதுகாக்கின்ற
தாலடக்க முடைமை
தாவுமானேந்துகர தலநீலகண்டனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கங)

## ஒழுக்கமுடைமை.

ஊருடன்கூடிவாழ்ந் தணுவுயிரெனக்கண்
டுயர்ந்தநிலை யோடிருந்தே
போதாரணந்தனை மறந்தாலுநிந்தையி
லொழுக்கமற வாமனல்ல
சீருடன்குலநலம் பெருகவுங்கீர்த்திச்
செழித்தோங்க விம்மைதனிலே
தேவரென்றேவரும் பத்தியாற்றோத்திரம்
செய்யவும் மையவிவர்தாம்

ஆருடன்கூடினு ரென்னினன்னிலையிலென்
றவனியோர் மகிழ்கூறவும்
அறமாகபழிபாவ மதுபோகநின்றலே
ஆசாரமென்ப வாலோ
தாருடன்கொன்றைமுடி தாங்கியபுராரியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கச)

பிறனில் விழையாமை.

வருகாமமெய்ம்மயக் காலேபிறன்வாழு
மனையிலுள்ளாளை யுள்ளார்
மாபாவமச்சம் பகைப்பழியடைந்துநெறி
மாறியொரு கருமமுயலார்
இருகாற்பிறன்வாயில் சென்றுபேதையரா
யிருக்கின்ற தீமைபுரியார்
இறந்தாரெனப்பட்டு தெளிவற்றுவருபழியை
யென்றுஞ் சுமந்துநிற்கார்
ஒருகாலமும் பிறன தில்லாளை*தள்ளையென்
றேங்கறத் தாண்மையுள்ளார்
ஓதுநலமுடையார்பி றன்மனையைவிழையாத
வுத்தமரெனப் புகல்வர்காண்
தருகாலைசந்த †வட சாரலமராதியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கரு)

---

* o தள்ளை = தாய் = † வடசாரல் = கைலை,

## பொறை யுடைமை.

குற்றந்தனக்கொருவ னறியாதுசெயினுங்
குறித்தினானென்று தன்வாய்க்
கூசாமல்வைதாலு நெஞ்சங்கறுத்தணுகி
கோவித்தெழுந்து வரினும்
கொற்றமாயதுவெலாம் பொன்பேழையாய்மனம்
கொண்டநற் கீர்த்தியிந்த
குவலயம்போமளவு மாறாதுசீரே
கொடுக்குங் குணங்கொடுக்கும்
நற்றவமுளாரென்ன வுண்ணாதவிரதமிகு
ஞானமிக்கா ரென்னவே
நானிலமெலாம்புகழ மனமாறிநிற்பதே
நற்பொறையெனப் புகல்வர்காண்
தத்தமக்கானகதி தரவருகிரீசனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கச)

## அழுக்காறாமை.

நல்லார்கள்வறுமையாற் றுயரனுபவிப்பதும்
நலமிலாத் தீயரெல்லாம்
நளினவலர்மேன்மங்கை செல்வமாய்ச்சுகமாக
ஞாலத்து வாழ்ந்துள்ளதும்
வல்லான்வகுத்தவழி யீதென்றறிந்தவர்
மயங்கியெவ ரெந்தநிலையாய்
வாழ்ந்தாலுநந்தக் கில்லையே யெனவுள
மதிக்கார் மனத்தினினையார்

இல்லாதபாவியா யுண்பது முடிப்பது
பிறந்து மூதேவிவசமா
யிருந்தறிவுதருமமா சாரந்தனப்பே
றிலாரே பொறுமையுடையார்
* சல்லாபவுல்லாச மெல்லாமுளீசனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கஎ)

## வெஃகாமை.

தனதானியம்பெருக நடுநிலைமையுண்டாக
தன்குடியுயர்ந்துவாழத்
தாமரைச் செல்வியருளோக்கமுண்டாகச்
சகம்புகழ பாவமகல
மனமாசகன்றொளிர வைம்புலனடங்கமனே
வருபொருணிலைத்திருக்க
வலியுடையவிழிவேக வற்பசுகவிச்சையே
வாராதிருக்கவேண்டி
அனுமானமில்லாத நல்லார்பிறர்பொருளி
லாசையில்லார்களென்றே
ஆய்ந்தெடுத்தோதவரு போதமாகியநீதி
யதனைவெஃகாமையென்பர்
சனனமோசனமடியர் சாரவருளையனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கஅ)

* சல்லாபம்=வினவும் விடையுங்கூடியசொல்.
உல்லாசம்=சந்தோடம்.

## புறங்கூறாமை.

பேசவென்றாலொருவன் காணாவிடத்தவன்
பெருமையுரை யாமலிந்நான்
பெற்றவாழ்வீதென்ன குற்றங்களோதுவோன்
பின்னவனை கண்டபொழுதே
நேசமுடையானென்ன நகைமுகங் காட்டுவோன்
நெஞ்சிலொரு வஞ்சமுள்ளோன்
நிட்டூரனென்னிவன் சாவில்லையென்றுலக
நிந்தனைப்படு முடம்போன்
பூசலிட்டிருவருக் கொன்றுமறியாதவன்
போலிருக் கின்றமதியன்
பொங்குதன்குற்றத்தைத் தான்கண்டுதேரான்
புறங்கூறு வானென்பர்காண்
தாசனென் றன்புடைமை யுள்ளவர்கணேசனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௧௧)

## பயனில சொல்லாமை.

சொல்லால்வருங்குற்ற மின்னதென்றாயாது
சோர்வடைய வோதுமொழியும்
சுகமாய்தனக்கும் பிறர்க்குமுதவாதவொரு
சொல்லெடுத் தாடுமொழியும்
செல்லாதவார்த்தையும் தன்மார்த்தகாமத்தைச்
சேராத வேறுமொழியும்
சீருஞ்சிறப்புங் கெடப்புகலுமாற்றமும்
சிந்தைமகி ழாதமொழியும்

பல்லாருமென்னிவன் றயவிலானென்னப்
பகர்ந்திடவு ணர்ந்தமொழியும்
பாங்கற்கிழைத்ததீ தெனவோதுமாற்றமும்
பயனிலாச் சொல்லென்பர்காண்
* சல்லாரியாயினுங் காக்கருணைவாரியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாத சிவ
சாமிதென்கைலாயனே. (20)

## தீவினையச்சம்.

மாபாவியஞ்சாது செய்வதும்பெரியோர்
மறந்துஞ்செ யாதுள்ளதும்
மற்றோருடம்பினுந் தீயெனப்பற்று
வருத்தங் கொடுக்கின்றதும்
பூபாலராலிம்மை தன்னிலேதண்டனை
புரிதற் கிடந்தருவதும்
பொல்லாதபகைவற்கு மாற்றுதென்பதும்
போதங் கெடுக்கின்றதும்
கோபாவெசத்தோடு நரகங்கொடுப்பதும்
கூடிதன் னிழலானதும்
குற்றம்பெருக்குவது முடையதாற்றீவினை
குறைக்காணி னஞ்சவென்பார்
சாபானுக்கிரகம் படைத்தவருளத்தனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உக)

---

* சல்லாரி = அபாத்திரன்.

ஒப்புறவறிதல்.

தாரணியிலாம்பயிரை வேறுதவிகேளாது
சார்ந்தமேகங்க ளொப்பார்
தன்னைவிற்றும்பிறரை காப்பதாலுறுகேடு
சந்தோடமென்று மகிழ்வார்
பூரணமனங்கொண்டு வறுமைநாளினுமுதவி
புரிவார்வ ருத்தமறிவார்
புத்தேளிருலகத்து மரியபொருளாகியுயிர்
போலாயெ வர்க்குமெழுவார்
ஊருணியெனப்பெரிய வூர்நடுவிருந்தமர
ஞெண்கனி யெனக்குலவுவார்
உத்தமரெனப்புகல சித்தமுடைமானவரை
யொப்புற வினிற்பரென்பார்
* சாரணமுறும்பெரிய சர்வசங்காரனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உஉ)

ஈகை.

வறியவர்முகங்கண்டு தருதலே கொடையென
மதித்தவன் றேவருலகம்
வாராதெனப்பல ருரைத்தாலுமீவது
மறப்பிலா னில்லையென்று
நெறியினுனிரவலர்க் கின்முகங்காட்டுவோன்
நேடுபொருள் வைக்குமிடமா
நீத்தார்பசிப்பிணி யகற்றலாற் பசியிலா
நிலையினன் றியாகியென்பார்

---

சாரணம் = உலகத்தை பஸ்மமாக்குதல்.

சிறியமதியார்கொடுத் தின்பமறியாதுபொருள்
தேடிப்புதைத்து வைத்தோன்
செத்தானிருந்துங் கொடுக்காத்திறத்தவத்
தீயவனை லோபனென்பார்
*தருகணாளர்க்கணாத் தத்துவ சொரூபியே
சாந்தாணி ராமலிங்கன்
தத்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உ௯)

புகழ்.

ஏற்பவர்க்கீதலும் மீதலாலுலகத்தி
லெய்துபேறது வேற்றலும்
என்றுங்கெடாதவொரு நாமம்படைத்தலும்
எளிதாக வரியதுறலும்
பூப்பொன்னெனக்கண்டு தேவரையுமதியாது
பொன்னுலகு வழிநோக்கலும்
புகழாகவாழ்தலும் மிகழ்வென்பதொன்றிலாப்
புனிதப்பிறப் பெய்தலும்
மாப்பூமிவிளைவுகுன் றுமையும்பின்னொரு
மகவா யிருந்துதவலும்
வையத்திறந்தாலு முயிரோடிருப்பதாய்
வாழ்தலே புகழென்பர்காண்
†சாற்பவமகற்றவளர் சைலசஞ்சீவியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உ௪)

* தருகண் = அஞ்சாமை

† சால்பவம் = மிகுந்த பிறப்பு.

## துறவறவியல்.

### அருளுடைமை.

### விரதம்.

எவ்வுயிரிடத்துமொரு கருணையுண்டாகலும்
இயல்பான குணமுடைமையும்
எத்தொடர்புமில்லாது தத்தமது துணையென்ன
இதயத்தி லீரமுறலும்
திவ்வியசொரூபமு நரகம்புகாதவொரு
செல்வமும் மின்புடைமையும்
செல்லிடத்தின்பமு மறுமைமறவாமையும்
சித்தமுயி ரஞ்சாமையும்
அவ்வியமிலாதபொரு ளுடைமையுமெய்ப்பொரு
ளறிந்தா னறிந்தவழியும்
அற்றவலியாளர்மேற் கோவித்தெழாமையும்
அருளுடைமை யென்பவாலோ
* சவ்வியமிருந்தம்பி ளேக்குநடராஜனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உரு)

### புலான் மறுத்தல்.

சீவர்களிடத்தருட் சிந்தையுடையோன்றனது
தேகமு மென்றறிந்தோன்
தெய்வவருளுடையவன் பிறவுடற்றசைநாவி
நீண்டப்பெறாத மதியோன்
பாவத்தெலாந்தலைக் கொலையென்றறிந்தவன்
பாழ்நரக முண்ணவொண்ணான்

சவ்வியம் = இடப்பாகம்

பசுவாருயிர்க்கொல்லு மோமமதியானுயிர்
பறந்தபிண மென்றறிந்தோன்
பூவுலகவுயிரெலாம் போற்றநின்றோன்றனைப்
புண்ணென் றறிந்தபெரியோன்
புலைவிலையுறுதவொரு நிலையுடையசெல்வனைப்
புலான்மறுத் தவனென்பர்காண்
தாவினியெனக்குனருள் சச்சிதானந்தனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உ௬)

தவம்

பஞ்சவிடயத்துமன நாடாதிருத்தலும்
பசிநோய்பொ றுத்துவாலும்
பாரிலுயிருக்கூறு செய்யாதிருத்தலும்
பழவினையி லின்பமுறலும்
வஞ்சனையிலாதுமனை வாழ்ந்தேதவந்தனை
மறந்தேது றந்தவர்க்கே
மருந்திருப்பிடமுண்டி யுதவவென்றெண்ணியே
வாழ்தலு நினைத்ததுறலுந்
தஞ்சமென்றவர்தன்னை யாக்கலும் பகைவரைத்
தணற்படவொ ருக்குவலமும்
தருமனையடக்கலுந் தன்கருமமாற்றலுந்
தவமென்று ரைக்குமுலகம்
*சஞ்சிதமிலாதவொரு பஞ்சமகதிக்கனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உ௭)

* சஞ்சிதம = கட்டுப்பட்டவினை

கூடாவொழுக்கம்.

நின்றநிலையிற்றவறி தம்மால்விடுத்ததை
நினைத்தல்ல வழிநடத்தல்
நெஞ்சவஞ்சகமாகித் தம்முள்ளமொவ்வாது
நீதிவழுவா நடத்தல்
வென்றகரணத்தவரி னுலகந்தனக்கான
வேடமாத் திரமுடுத்து
வேங்கையின்றோல்போர்த்த பசுவென்னபுதரின்மறை
வேடனென் றிகழுலாவல்
குன்றின்மூக்கிற்கரிய வுள்ளங்கருத்தம்பு
கோலமாய்க் கொடிதியற்றல்
குவலயத்தவரெலாம் பழிகூற நிற்றலே
கூடாவொழுக்க மென்பர்
தன்றவறிலாததவர் சாரவருமூலமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உஅ)

கள்ளாமை.

நெஞ்சம்புறத்திலே போகாமலுள்ளே
நிலைத்திலக் கினைநோக்கலே
நியமமென்றறிவா யுடம்பின் பொருட்டொருவ
னேடுபொரு ணினையாமையும்
* பஞ்சமகதிக்குரிய னிவனென்றுயர்ந்தோர்
பராவவொரு பொருள்கையினால்
பற்றுமைநலமென் றறிந்தமைபிறர்பொருளில்
பாசமில்லாத நன்மை

* பஞ்சமகதி=மோக்ஷம்.

வஞ்சனையிலாமைகள வாம்போற்கெடுந்திற
மதித்தமை யுயர்ந்தபெருமை
வானுலகுறுந்தகைத் தம்முடலநீங்காத
வாய்மை கள்ளாமையென்பர்
தஞ்சமென்றுரையஞ் சேலெனுமதீதனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (உக)

## வாய்மை.

தம்மாற்சொ லுஞ்சொலா லோருயிர்க்குந்தீது
தாராம லோதுமொழியும்
தனிவிளக்காயோங்கி குற்றத்திடந்தரா
தன்னெஞ்சு வக்குமொழியும்
அம்மாவெனப்புவன ருள்ளம்புகுந்திருந்
ததிசயந்தந்த மொழியும்
அறமாகிபுகழாகி தவமாகிபிறவாகி
யாணையா யோங்குமொழியும்
மைம்மாரிநீராற் புறத்தூய்மையாம்போன்
மனத்தூய்மை யானமொழியும்
மாதவத்தலைமையா யாசையில்லாதமொழி
வாய்மையென் றோதுமுலகம்
*சம்மானனர்புரித வர்க்கருளுமத்தனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூ0)

---

*சம்மானனம் = வணக்கம்

## வெகுளாமை.

வலியார்முனந் தனது கோபஞ்செலாதெளியர்
மாட்டெழுங் கோபமதனல்
வறுமையேயுண்டாகு மருளினுலுண்டா
மகிழ்ச்சிமுக நகையுமாயும்
பலியாதறந்தனைக் காக்கவென்றுற்சினம்
பற்றுதி ருக்கவேண்டும்
பாவந்தருங்கோப வலியினுலுண்டாய
பற்பல சுடர்க்கொழுந்தே
நலியாதுவிட்டிடா தெண்ணிய வெலாம்போ
நலந்தேயு நகைநிலத்தே
நண்ணலாற் செத்தா னெனக்காணுமதனு
னனுதொழிக வெகுளியென்பார்
சலியாதகற்பக நகுங்கருணையாளனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௩௧)

## இன்னுச்செய்யாமை.

துறந்தார்கடதவராஜ யோகச் சிறப்பினுற்
றேய்ந்தாலு மணிமாவனு
சொல்லாதிசித்தியாஞ் செல்வத்திருந்தாலுஞ்
சோர்வினு லேனுநல்ல
அறந்தானறப்பயனை யெண்ணியேனும்வைர
மானதா லேனுமுலகத்
தாருயிர்க்கொருதுன்ப மாற்றப்படாதின்ப
மாற்றலே தக்கவின்னு

மறந்தாயினுஞ்செய்த லறிவிற்கடாதுசெய
    மற்றவனை முற்றுநோயே
வருமொன்றுநூறா வருத்துமதனாலினு
    மாற்றலே நலமென்பர்காண்
*தறும்பிலாமெய்ப்போத வின்பக்கபாலியே
    சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (௫௨)

## கொல்லாமை.

கலையாகிவிரதங்க ளெல்லாந்தரும்பயன்
    காண்பதுங் கொல்லாமையே
கருமமென்றொருநூ லுரைப்பதாலோரறிவு
    காக்குமுயி ரேனுமுணவே
நிலையாயளிக்கவே வேண்டுமஃதில்லையேல்
    நீக்கியுட லுயிரையந்தோ
நீசப்புலக்கடைய ராகவோவேள்வியா
    னின்றாகு மாக்கமுறவோ
தொலையாதுமறுமையே பார்க்கப்படாதநோய்
    துன்னவோ மறுமையிம்மைச்
சூழவோமாநரக வாழிதனிலாழவோ
    தூர்க்கொலை யிழைத்தலென்பார்
தலையாயிருந்தகதி தந்தருளுமன்னையே
    சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (௫௩)

---

* தறும்பு = வரம்பு.

## ஞானம்.

### நிலையாமை.

தோற்றமுடையவையெலா நிலையிலாதென்றவொரு
சொல்லாலறிந்து செல்வந்
தோன்றுநாணல்லறஞ் செய்தாற்றனக்கான
துணையாகு மில்லையானால்
போற்றினுக்கூத்தவைப் போலேகுமுள்ளநாள்
புலையுடல றுக்கும்வாளே
பொழுதொன்றுநில்லாதிவ் வுடல மோவொருகோடி
புந்தியினி லெக்குமெண்ணம்
நேற்றிருந்தாரின் றிருப்பதிலைசாக்காடு
நித்திரைவிழிப் புதிப்பே
நிலையானவீடில்லை குடியிருந்துயிர்வாழ
நீணிலத் தென்பவாலோ
சாற்றுமாரணவந்த மேவமல மூர்த்தியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௩௪)

### துறவு.

புறமாயசெல்வமும் அகமாயவுடலமும்
போமென்றறிந் துணர்ந்தார்
புந்தியுற்றதுவிட்ட பொருளாலெழுந்துயர்
புகாதெம்மை யென்றறிந்தார்
அதமான பற்றற்றிருப்பதே விடுவதோ
ரைம்புலச் சேட்டையதனால்
யானெனதெனுஞ்செருக் கற்றறிவாக்கையே
யதிபார மென்றறிந்தார்

துறவானபோதே பிறப்பற்றுநிலையாமை
தோன்றநின் றூர்கணெஞ்சம்
தூயராய்ப்பற்றிலான் பற்றினைப்பற்றினோர்
துறவிக ளெனப்புகல்வர்காண்
* தறுவாயறிந்துதவு குருவானமூலமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௧௫)

## மெய்யுணர்தல்.

சாந்தேகவிபரீதமில்லாது மெய்ப்பொரு
ளைத்தேறி யின்பவடிவாய்
சார்பென்பதெல்லா மறக்கண்டுதுன்பந்
தணந்துபின் சார்புநாடி
எந்தேகமென்பது மறந்துமெய்ப்பொருடன்னை
எப்பொருளி டத்துமோர்ந்து
† இவ்வுலகமேறு நெறித்தாகியவ்வுலக
மேறுமா றெளியதாகி
ஐந்தாயகுற்றங் கடிந்துவிடயக்கா
டருட்கனலி னெரித்து
அறிவாறிநிற்கின்ற துறவியேமெய்யுணர்
வறிந்தா னெனப்புகல்வர்காண்
தந்தாபமற்றவ ருருந்துசிவபோகமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௧௬)

---

* தறுவாய் = உற்றசமயம்.
† ஏறுநெறி = பிறவாவழி.

## அவாவறுத்தல்.

ஆகாமியஞ்சஞ்சி தப்பேறெனுந்தொடர்
பறுத்தாலு நடுநின்றமெய்
பதிகொண்டவிருவினையு மதுபற்றிவிடுபட்ட
வைம்புலவ சத்தினிலேயே
போகாதவாசனையின் முன்னனுபவந்தான்
பொசிப்பிக்கு மதுவாதலே
புன்மையாகியவவா வதுபிறவிவித்தாய்ப்
புலப்படுவதா லறிந்தோர்
மாகாதலஞ்சியே துன்பத்தினீங்கினார்
மற்றதனை வேண்டாமையே
மதிவந்துகதிதந்த மெய்ப்போதவின்பமா
மயமாவ ரென்பவாலோ
சாகாததலையும்வே காதகாலானவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௩௭)

## ஊழ்.

செய்யறம்பொருளின்ப மொருமூன்றிலெந்தவினை
செய்தவன் செய்தபடியே
தேவதேவேசனே கூட்டிவிப்பானது
செறிந்தவூ ழாகுமதனல்
பொய்யறிந்தறிவாத லொன்றுதிருவாதல்
பொருந்தலொன் றிதுவலாமல்
போதலாற்போகுமறி வாதலாலாகுமிகு
பொல்லாது நல்லவாகும்

வையமதிநல்லபொல் லாவாகும்வாராது
வாராது வருதல்வருமே
வல்லவூழ்வெல்லவே யெண்ணிலதுமுன்னிற்கு
மாற்றவரி தென்பவாலோ
தையற்பசுங்கொடி படர்ந்தவேதண்டமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௩௮)

## இரண்டாவது பொருட்பால்.

### அரசியல்.

### இறைமாட்சி.

படைகுடியமைச்சுசூழ் நட்பரணமென்பது
படைத்தீகை வலிவிவேகம்
பண்ணுமனவூக்கமுடை யோனுகிவிரவுடைமை
பயிலருங் கல்வியாண்மை
புடைமையுடனறனிழுக் காதலலநீக்கிவலி
யோங்குகன மெய்திசெம்பொ
னொருமையினியற்றிசேர்த் தோம்பிதனதின்சொலா
லுலகுயர்த்துங் கொண்டபே
றடையவருமுறையறு நெறியினுன்மக்களுக்
காண்டவ னெனப்புகலவே
யல்லவுரையும்பொறுத் தளிகோற்கொடைக்குடிய
ளித்தலிறை மாட்சியென்பார்
சடைமுடிதுளங்கவரு சங்கரசுயம்புவே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௩௯)

## கல்வி.

நல்வித்திவிறைந்தினிய கற்ககற்பவைகற்ற
நடையிலே நிற்கதக்க
ஞானமுயிருக்கெழுத் தெண்ணென்றுசொல்வதிரு
நாட்டமா நாட்டமுடைமை
சொல்வதுபடிப்புளார்க் கன்னவர்கணேசமே
தோய்வது மறிந்திலாமை
சொன்னமுடையார்முனே யில்லாரெனக்கலார்
தொட்டனைக் தூறுமணனீர்
வல்லவரகத்தூறு மறிவவர்க்கூறெலாம்
வசமாகு மெழுமையுதவும்
மனதின்புறக்கற்ற துலகின்புறக்காணு
மதியதே கல்வியுடைமை
* சல்லியவலங்கலணி தாங்குபரமேசனை
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனை. (௪௰)

## கல்லாமை.

அரங்கின்றிவட்டாடி யற்றேநிரம்புநா
லறியார வைக்கணேகல்
ஆங்கொருசொலோதவென விருமுலையுமில்லாத
வரிவைகா முறுதலுரையோ
நிரம்பவையிலேறுது பின்னவரையறிவுளார்
நினவிற்கொ ளாரவர்முனே
நின்றேறுதிலவர்பெருமை குன்றும்விளைவில்லாத
நிலமென நலந்தராது

---

* சல்லியவலங்கல் = எலும்புமாலை.

திரங்கொண்டவழகுமட் பாவையேயவர்கொண்ட
திருநலின் பந்தராது
சென்மித்தசாதிமே லாயினுங்கல்லார்
சினத்தமிரு கங்களொப்பார்
தரங்கக்கடற்கரு விடந்தங்குகண்டனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சக)

## கேள்வி.

செவிச்செல்வமேதலைய தில்லாதபோதுணவு
சிறிதுவய றுக்கீயலாஞ்
செந்தமிழறிந்திலே மாறனுமஃதுதாழ்ந்த
சிந்தைக்கொ ருதவியாகும்
அவிக்குணவினன்றேரி னைப்பாவமென்றெண்ணி
அரியவொரு கேள்விகொள்வார்
ஆய்ந்தோருரைச்சேற்றி னுள்ளூன்றுகோல்கேள்வி
யழிவிலாப் பெருமையென்றே
புவிப்பொறையறிந்தமுது கேள்வியோரறிவினைப்
புன்சொலுரை யார்கேள்வியுட்
போகாச்செவிச்செவிடு துளையிலதுகேளார்கள்
பொன்றிலென் வாழ்ந்துமென்னும்
* தவப்பெரியகுன்றவில் லேந்தியபுராந்தகா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (சஉ)

---

* தவ = மிக.

## அறிவுடைமை.

நன்றரசருக்கறிவு காக்குமொருபடையென்ன
ஞாயிலா மென்றெண்ணுவார்
நற்சொலெவர்வாய்வரினு மெய்ச்சொலறிவிற்றெளிய
நன்மொழி யுரைத்தறிவதாம்
சென்றவிடமேமனது செலவிடார்நல்வழி
செலுத்துவா ருலகுநட்பாச்
செய்வர்முகமலர்வுகுவி வின்றியெதிரெழுமவை
தெரிந்தஞ்ச லஞ்சலென்பார்
பொன்றவருதுன்பங்க ணோராமுனந்தனைப்
புரக்குங் கருத்தையுடையார்
புத்தியுடையோரெலா முடையரிலருளதெலாம்
பொங்கினு மிலாதவறியார்
தன்றவறிலாரக மிருந்தவானந்தமே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சுரு)

## குற்றங்கடிதல்.

செருக்கொடுசினஞ்சிறுமை யில்லாதசெல்வமே
செல்வங் கொடாமைமானம்
சிந்தையளவறுமகிழ்வு நன்மைநீங்கியதீங்கு
சேராதி ருந்துபாவப்
பெருக்கஞ்சி*யற்றந் தரும்பகையெனச்சொலும்
பிழையெலாங் காத்தப்பிழை
பேதிக்குமுன்காத்து தன்பிழையறிந்தொருவர்
பிழைகாணு மரசிதென்று

* அற்றம் = சமயம்.

பொருட்பற்றறக்கொண்டு செய்வனசெயாதொழியப்
போந்திரு விமைப்போதெனு
பூரித்திராதுதனை மதியாமலிச்சைவெளி
போக்கிடான் குற்றமில்லான்
தரிக்கும்பிறைக்கொழுந் துலங்கிலவுவேணியா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௪௪)

## பெரியாரைத் துணைக்கோடல்

மூத்தவறிவுடையார்க ணேசமதறத்திற
முகந்தெரிந் தினிதுகொண்டால்
முற்றுநோய்நீக்கிப் புரப்பாரிதவர்துணை
முதற்பாக மன்னகண்ணுப்
பார்த்தொழுகவல்லானை யிந்தவுலகத்தொரு
பகைச்சார்வ தில்லைசார்ந்த
பகையறுக்குந்துணைவ ருள்ளாரையொருவரால்
* பரிபவஞ் செய்யமுடியா
சீர்த்தமதிசொல்வா ரிலான்கெடுவனூதியம்
செல்வமில் லார்க்கில்லைபோல்
திக்கெலாம்பகையென்ன பொல்லாதுநல்லாரை
சேராத வர்க்கென்பர்காண்
சார்த்தியுரையாடவுனை யன்றியிலையின்றுகா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௪௫)

* பரிபவம் = துன்பம்.

### சிற்றினஞ்சேராமை.

தீயசெயலஞ்சாத தூர்த்தவிடராயவொரு
சிற்றினம் பெரியர்சாரார்
சிற்றினஞ்சிற்றினஞ் சுற்றமாநிலவியல்
திரிந்தகுண நீரினேராய்
நேயமனதாலறிவு திக்குமக்கட்கின
நிலத்தவகை யுலகமின்ன
நெறியுடையனென்னமுற் காட்டவருநல்லவினை
னெஞ்சமொடு செய்தவினையும்
தூயவாந்தம்மக்கள் தூயவாம்புகழுலகில்
தூயவாம் வலிமையுண்டாம்
துன்பமாந்தீயவினை யல்லற்படுக்குமது
தூரவிட னன்றென்பர்காண்
தாயெனவெனக்கக மிரங்கியருணம்பனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனை. (௪௯)

### தெரிந்துசெயல்வகை.

அழசரையர்மிக்கழிவி லாபமாதற்கருதி
அறிவின ரினஞ்சேர்ந்தறிந்
தாற்றுவினையாலரிய தொன்றிலார்கைப்பொரு
ளழிச்செய லெடுத்துமுயலார்
பழிகருமமுஞ்செயார் நினையாதுபகைமேற்
படர்ந்தவரை நிலையாக்கிடார்
பண்ணுவினைவிடுதலாற் பண்ணுதசெய்தலாற்
பாடுவரு மென்றெண்ணுவார்

தொழிறுணிதனெறிதுணிந் தெண்ணுவதிழுக்கென்ன
சூழ்ந்துசெய மெளிதிலடைவார்
தொல்லுலகநிலையறிந் தாற்றுவினையாற்றுவார்
சொற்றெரிந் தாரென்பர்காண்
தழனிறசிவக்கொழுந் தேயன்பரின்பமே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சஎ)

## வலியறிதல்.

மாற்றான்வலித்தனது வலிவினைவலித்துணை
வலித்தூக்கி செய்தலரசர்
மனவலிதிறத்தநெறி போயெளிதிலடைவன
வரக்கண் டிருப்பரொன்னார்
மேற்றுவியாயா திடைக்கெட்டபேர்சிலர்
வியந்திருந் தாருமற்றே
மெல்லியமயிற்பீலி யேற்றிரதமச்சிறு
மிகுந்ததாற் கொம்பினுனியின்
பாற்றுவினாறிறக் கண்டாந்தனத்தளவு
பாங்கறஞ் செய்தலழகாம்
பண்ணுதவியேனுமது வாயாதுசெய்யிலது
பற்றறக் கெடுமென்பர்காண்
சாற்றுமொழிகேட்டருள் சதோதயசுபோதமே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சஅ)

## காலமறிதல்.

வேந்தரும்பகைவெல்ல காலமென்றொருபொருளை
வேண்டுவார் காக்கைகூகை
வெல்லும்பகற்பொழுது பருவமென்பதுதிருவை
வீக்குமென் றறிவறிந்தோர்
தாந்தாரணித்தவித் தாளவெணினுமது
தருமென்ற தாற்பினேகும்
தகரொத்திடைந்துளார் கோபத்தையுங்கொளார்
சரணஞ்செய் வார்பகைக்கே
ஏய்ந்தவக்காலமே கொல்லலாம்பகைவரை
யிருந்தகொக் கொத்திருந்தே
எழுந்ததன்குத்தென்ன பருவத்தியற்றுவார்
என்றுமுல காளநினைவார்
சார்ந்தாரைமுத்திநில வேந்தாக்குபரமனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சக)

## இடனறிதல்.

இடங்கண்டபின்னலா தெவ்வினையுமுயலார்
எளார்ப்பகையை யுலகமாள்வோர்
எவ்வலிமையுள்ளார்க்கு நகரைப்புரங்காப்ப
இஞ்சியுறி லாக்கமுதவும்
நெடும்புனலுளேவெலு மிடங்காதுவிட்டுவெளி
நீங்கிலஞ் சுமிடமா
நிலையுளார்வலியிலா ராலும்வெல்வர்வரு
நேராரி ழப்பரெண்ணம்

படங்கொண்டநாவா நிலத்திலோடாதுதேர்
பௌவமோ டாதுகண்டாம்
பாரதுணைவென்றிமேற் பகைவராணுகாதசீர்
பயனுறுவ ரிடமறிந்தார்
சடந்தவிரவின்றன நடந்தருபதந்தராய்ச்
சாந்தாணி ராமலிங்கன்
தத்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௦)

## தெரிந்துதெளிதல்.

தெளிவந்துளாரறம் பொருளின்பமுயிரச்ச
திறமறிந் தினிதுவாழ்வார்
செய்யநற்குடிவந்து மாசெலாநீங்கிவடு
சேராம லரியகற்று
வெளிவந்திருந்துகுண குற்றங்கணுடிமிகை
வேண்டிய துரைக்குங்கலாய்
வினையாலறிந்துறவி லாரையறிவனவஃறிய
வேண்டாரை பிறரைவிட்டே
அளிவந்திருந்தாய்ந் தறிந்தபொருடேறுவ
தறத்ததா மாய்ந்தபொருளில்
ஐயமுந்தேரா ரிடங்கொண்டதேற்றமு
மவத்தைக் கொடுக்குமென்பார்
தளிவந்தநெஞ்சகத் தொளிரந்திவண்ணனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௧)

தெரிந்துவினையாடல்.

வல்லதொழிலேனுமர சர்க்கெளிதிலாற்றுவோன்
வருநன்மை தீமைநாடி
மாசிலவறிந்தவன் பொருள்வழியறிந்தது
வளர்ப்பவிடை யூறுகாப்போன்
நல்லவறிவின்பவா தோற்றமுடையோன்மன
நலங்கண்ட வேந்தனறிய
நாடவுறுவோன்றனை தெரிந்துவினையாடலா
னலநாடி காலநாடி
பல்லவினையிதனையித னுற்புரிவனென்றெணி
பரிந்துவினை புரிமையுறுமா
பார்ப்பவனைவேறு மதிக்கலாகாதுலகு
பழையாத தருமனென்பார்
* சல்லகிமலர்ச்சடை தரித்தொளிரநாதியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (ருஉ)

சுற்றந்தழால்.

சுற்றந்தழாற்செல்வ மில்லாதநாளினுந்
தொன்மைபா ராட்டலன்பு
தோன்றுவதிரக்கமுந் தோன்றுவதுதமரெலாஞ்
சூழத்த மித்துவாழ்தல்
பெற்றபொருளாற்பய னளித்தலின்சொல்லே
பிறத்தலக மளவளாவல்
பெருகரையிலாத்தட நிறைந்தநீராந்தமரைப்
பேணுதி ருத்தலுள்ளப்

* சல்லகிமலர் = ஆத்திமலர்.

பற்றுறவெலாமுளது காக்கைக்கரைந்துணும்
படியுள்ள தாக்கமுளது
பக்கமுறுநீர்மையுள தற்றவருமுற்றப்
படுந்தகைத் தென்பவாலோ
சற்றறிவகண்டவறி விற்றெனநிறைந்தவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (ருரு)

போச்சாவாமை.

ஆற்றலழகுறுசெல்வ மிகமகிழலான்மறதி
யானதன வற்றகோபத்
தகிகமாமதுபுக ழறக்கொலுமிலம்பா
டடைந்தவ னுணர்ச்சியதுபோல்
போற்றச்சமுடையவர்க் கரணில்லைநாணில்லை
பொய்ச்சாப் புளாக்குநீங்கப்
போற்றிஞலிழிவில்லை வழுவில்லையரியதிப்
பூதலத் தொன்றுமில்லை
ஏற்றமுடைகருமங்கண் மறவாதியற்றிஞல்
எழுமையு மதிக்கவுதவும்
என்பதாற்கற்றதுங் கேட்டதுஞ்சமயத்
தெடுத்தோதன் மறவாமையாம்
சாற்றுநான்மறைமுடி விளங்கனகசங்கரா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (ருச)

## செங்கோன்மை.

ஓர்ந்துகண்ணோடா திறைப்புரிந்திலகமெலாம்
உற்றுணரு முறையவரசை
உலகெலாநோக்குமழை யென்னநோக்குங்குடிக
ளுள்ளசெங் கோலையதனால்
ஆய்ந்தநூற்கற்றநெறிக் காதியாங்குடிதழுவ
அடிதழீஇ நிற்குமுலகம்
அதிகவிளைவாகமழை பெய்தலும்வென்றியது
வாதலுமி வன்காப்பதால்
கூர்ந்திவனைக்காத்தலு முறைமெளிதினையவொரு
குற்றமற் றவனியோம்பிக்
கொடியரை யொறுத்துபைங் கூழ்களைகளைந்தாங்கு
குவலயத் துளதுசொங்கோல்
சார்ந்தவரையேந்துமரு டங்குபரிபூரணு
சாந்தானி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௫)

## கொடுங்கோன்மை.

அலைமேற்புரிந்தல்ல செய்தொழுகுமன்னவ
னடுங்கொலைஞ னவனிரத்தல்
அயிலொடுமறித்துவழி நின்றுரைப்போன்கால
வற்றமுண ரானுமழிவான்
நிலைமாறுவோன்கூ ழடுங்குடியிலான்குடி
நெறிப்பவழு மங்கணீரால்
நில்லாதுசெல்வமிசை நில்லாதிலாவருளில்
நிலவலய மெய்துமல்லல்

இலைமுறையவன்கீழ்ப் படிற்பெரியவறுமையினு
மின்னுமை யில்லைமழையும்
இல்லையந்நாட்டிலாப் பால்குன் றுமறையவர்
இறப்பவு மறப்பரொருநூல்
தலைமாலைபூண்மணி யொளிநீலகண்டனை
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௬)

வெருவந்தசெய்யாமை

தக்கவகைவினைநாடி நடுநிலைமையொத்தங்கு
தண்டிப்ப தரசங்கமத்
தண்டனைக்கொடிதாய் விதித்துமெலிதாற்றுவான்
சலசையருள் வேண்டுமிறைவன்
இக்கொடியனென்றுலகு ரைப்பவுமருஞ்செவ்வி
இன்னுமு கத்துடையனும்
ஏழைமுகநோக்காக் கடுஞ்சொல்லனுங்கை
இகந்ததண் டனையுடையனும்
வைக்குமதிமந்திரிகளை யெண்ணுதீயனும்
வாகைபெற வரணிலானும்
மாய்வநதிவிரைவிலே பூமிக்குபாரம்வெரு
வந்தசெய் கின்றதாலோ
சக்கிரவிமதியன னகுங்கிரணசோதியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௭)

## கண்ணோட்டம்.

நயமென்னுமிக்கழ கிருப்பதாலரசர்க்குத்
தாரணியி ருக்குமதனைச்
சாராதவரசனிப் பூமிக்குபாரமிசைச்
சரியிலாப் பாடலென்ன
நயனமுகமுண்டாயி னென்னுங்குளிர்ந்தநன்
னாட்டமா மழகில்லையேல்
நாட்டமே புண்ணுகு மாமாகுமக்கணே
நாடாக்க ருட்டுவடிவம்
நியமமாகியகரும மழியாதுகண்ணோட்ட
நிலவசிய மாகுநஞ்ச
நின்றெதிரிடக்கண்டு மமைவதேகட்கிருபை
நேசரிட மென்பவாலோ
சயனவரவணையினுன் றேடரியபாதனே
ராந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௫௮)

## ஒற்றுடல்.

நேசராயலார்பகைவ ரெனுமுத்திறத்தாரை
நேடியொற் றுடுமரசன்
நீதிநூலொற்றரிரு கண்களாக்கொண்டங்கு
நிகழ்பவை யறிந்தவெற்றி
யாசிரியனேயாச னரசனுக்கொற்றனே
ஆய்ந்ததொழி லுறவுபகைவர்க்
ககமுளது வெளிவிடா தஞ்சாதிருந்தெவரு
மையப்ப டாதவடிவாய்

பாசமி லுருக்கொண் டிறந்தாய்நது துனபிற்
படாதுதனை வெளிவிடாளும்
பார்த்தெதாருவர்க்கொண்டு பார்த்திறைவனெற் றுடல்
பண்பென் றுரைப்பவாலோ
தாசத்துவங்கொண்ட வுலகுபணியாண்டவா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (ருக)

ஊக்கமுடைமை.

தம்மனவெழுச்சியே யுடைமையாம்பொருளுடைமை
தாங்கியஃ தெங்குநிலையாய்
தளராதிருக்கநிதி யகலாது கூடுமிது
சகதல மறிந்தவிதியே
எமமணிதருக்குமுயர் வூக்கமலர்தாணீ
ரிடத்தளவு யர்ச்சியதுபோல்
எற்றந்தராச்சிறுமை வரினுமஞ்சாரம்
பெயப்பட் டிருந்தமாபோல்
மமமருளரிம்மகி மதிப்பிலார்கூர்ங்கோட்டு
மாவெரூஉம் புலியையுற்றால்
வருபொருளுமொன்றிலா ரூக்கமில்லாரோங்கு
மரமனைய ரென்பவாலோ
* சம்மியத்துவமான தத்துவசொரூபியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சு0)

* சம்மியத்துவம் = ஞானத்துவம்

## இடுக்கணழியாமை.

தனக்கூழினல்வரு மிடுக்கட்கிடுக்கணை
 தந்ததுநினைக்கமாளும்
சாரிடுக்கட்படா னுலையாமுயற்சியான்
 தைரியம்விடாதமுதியோன்
இனச்செல்வமுற்றனு ளுலோபநெஞ்சிலனகி
 என்றுமுபகாரமுடையோன்
இன்பத்தையிச்சியான் றுன்பத்தையியல்பென்ன
 இன்பத்தி லின்பமடைவான்
மனத்திடமுளானென்னு மின்னவெழுவாயார்
 வருந்தாரி டுக்கணுற்றால்
வாசனையிலாதமதி யாளரனவரதமும்
 வந்திதப தாம்போருகா
சனிப்பிறப்பில்லாதி னித்தகதிமூலமே
 சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
 சாமிதென்கைலாயனே. (௩௧)

## மடியின்மை.

குடியெனுங்குன்றாத தீபமேசோம்பலாங்
 கோசத்து ளாகிமறையும்
குலநலநினைப்போர்க்க தாகாதவன்வந்த
 குடிமடிவு தன்முனதனல்
நெடுநீர்மைமறதிதுயி லென்கின்றபகுதிகொடு
 நீரார்களேறுகலனும்
நிலையுடையசெல்வரும் பயனெய்தலரிதிகழ
 நேருமுல கவரைபகைவர்

அடிமைகொண்டாடுவார் மடியிலார்தங்குடியி
    னுசகலு மிசையுமுண்டாம்
அன்றடியளந்தான் பரப்பாயவுலகெலாம்
    ஆள்வாரெனப் புகல்வர்காண்
சடில்முடிமேனதி மதித்திகழநாதியே
    சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (சஉ)

ஆள்வினையுடைமை.

அருமையென்றேமனந் தளராமுயற்சியே
    ஆற்றினோர் நன்மையுடையோர
அவனிக்கொருபகாரர் தங்கேளிரைத்தாங்கும்
    அரியவொரு தூணமொப்பார்
பெருமையுடையார்பெருஞ் செல்வமுடையார்திருப்
    பிரியாதி ருக்குநிதியார்
பேதிக்குமூழையும் வெல்வரூழில்லாத
    பெற்றியும் பெறுவர்முயலார்
வரவினுநலம்பெறூர் பேடிகைக்கோலா
    மதிப்புளார் முகடியவரை
மருவிப்பிறிந்திலாள் முயலாமையாற்பழி
    வருத்துமிக நின்றென்பர்காண்
சரியைகிரியாயோக ஞானவடிவானமா
    சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
    சாமிதென் கைலாயனே. (சங)

## அங்கவியல்

### அமைச்சு.

குடிகளைக்காத்தலு மாள்வினையுமசைவிற்
குணங்கொண்டு கற்றறிதலும்
கூடிவருகாலமுங் கருவியுஞ்செயலுங்
குறித்தெண்ணி யறியுமதியும்
மடிவறுமுயற்சியு மருமங்களறிதலும்
மதிநுட்ப முடனாய்தலும்
மாண்டகுணமும்பிறிந் தாரைப்புணர்த்தலு
மானிலத் தியல்பறிதலும்
நெடுநடையுமில்லாமை யுளனையமைச்சராச
நீதிக்கு தீதுபுரிவோன்
நேரலரினுங்கொடிய னாதலாற்காவல
னினைத்தமைச் சாக்கநலனும்
* சடசடமெனக்கினி தவிர்க்கவருளையனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாத சிவ
சாமிதென்கைலாயனை. (௬௪)

### சொல்வன்மை

நாநலமுடைத்தாக வோதலுஞ்சொற்சோர்வு
நாடாம லோதுதிறனும்
நாடினோர்கேளார் செவிக்கொண்டிருந்தார்
நலங்கொள்ளு மினியமொழியும்
மானவர்சுவைக்கொளுஞ் சொற்சொலியவர்ச்சொலால்
வருபய னுணர்ந்தமொழியும்
மற்றவர்தனாற்சொலுஞ் சொல்லைவெல்லாதவொரு
வல்லமொழி யோதுதிறனும்

---

* சடம் — பொய். சடம் — சரீரம்.

தேனெனமொழிந்தெது தெரிந்தவரிடத்துந்
திறம்பானி ரம்புமொழியும்
தேருநூல்விரியவுரை செய்துபொன்மலர்மணத்
திருவுடைமை சொல்வன்மையாம்
தானெனதெனுங்கெடத் தருங்கருணைவாரியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (கூ௫)

## வினைத்தூய்மை.

வேண்டுவவெலாந்தந்து செல்வமுந்தருகின்ற
வினையுநன் குதவுவினையும்
மேலானநிலைதந்து கீர்த்தியுந்தருகின்ற
வினையுமின் புதவுவினையும்
மாண்டகுணமுள்ளாரு மென்றுமசைவில்லாத
மனமுளா ராற்றுவினையும்
வருந்தாவினைப்பெரிய ரெவராலுமெந்நாளு
* மதிமதிப் புள்ளவினையும்
தூண்டாப்பழிச்சொல் லிலாதவினையேவினைத்
தூய்மையாந் தீயவினையாந்
துற்புத்தியாற்றிடிற் பசியமட்கலநீர்
சொரிந்தவகை யாமென்பர்காண்
தாண்டும்பவக்கடலை யென்னவருளீசனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சாசா)

---

* மதி = புத்தி.

## வினைத்திட்பம்.

நெஞ்சத்திடங்கொண்டு பழுதுறுவினையே
நினைத்தறுன் செய்தவினைகள்
நேராதபோதுமன நெகிழாமலோங்குத
வினைப்பொரு ணினைத்தபடியே
தஞ்சத்தியாற்புரிதல் செய்வினைமுடிந்தபின்
சகமறிய வோதுவறிதல்
சகடப்பெருந்தேரி னச்சாணியென்னவித்
தரிணியி லிருத்தலினிதே
கொஞ்சந்தெளிந்தது தெளிந்தவினையின்றே
குறித்தது முடித்தலின்பம்
கூட்டுந்தொழிற்புரித லுலகத்தவர்க்குவினை
கொண்டது வினைத்திட்பமாம்
தஞ்சந்தரும்பெரியர் நெஞ்சத்துளமலனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௱௭)

## வினைசெயல்வகை.

புரணபண்டிதனாகி செய்வினைதிறம்பாத
புனிதநற் சூழ்ச்சிமுடிவுப்
பொருளெனத்துணிவுற் றதிற்சிறிதுமசையான்
பொறுப்பது பொறுத்துசெய்வான்
அரணங்கடந்துவரு குற்றங்கடிந்துபின்
அமையந் தெரிந்தமுதியோன்
அகிதந்தொழிற்குறை யனற்குறையெனப்புரியும்
அற்றந்தெ ரிந்துபுரிவோன்

தருணநிலையூறுவினை பொருளிடங்காலமுள
சாதன மறிந்துபுரிவோன்
சாருந்தொழிற்கொண் டெழிலான்முடித்தகிதர்
சந்திப்ப னரியசெய்வோன்
சரணபங்கயபோத நிழலருளநாதியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சுஅ)

தூது.

குணநலமுளானல்ல குடிப்பிறந்தோனறிவு
கொண்டுசொல் வன்மையுள்ளான்
குற்றமில்லன்புளான் றிருவுபொறையுளனல்ல
கோலவுரு வமைதியுள்ளான்
எணுமனமறிந்தமைய மிடமறிந்தரசருக்
கின்சொலாற் றுகைமொழியினல்
எடுத்தோதுவோனீதி நூல்கற்றறிந்தவழி
ஏற்கத்தெரிந்துரைப்போன்
துணிவுசுத்தந்துணைச் சத்தியமெனும்பொருள்
தோன்றிலக் கணமுமுடையோன்
றுபரமுடிவுற்றுனு மஞ்சாதுசொல்பவன்
தூதனென் றோதுமுலகம்
தணிவுணர்வெனக்கரு டருஞ்சூலபாணியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (சுகூ)

## மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அகலாமலணுகாமல் தீக்காய்வதென்னவிகல்
அரசரைச் சேர்ந்திருப்பார்
ஆண்டவைகவிழைந்தவிழை யாதவரிடத்திலோ
ராசிலாச் செல்வமுடையார்
மகிபனவையுற்றனது செவியோதநகையாட
வழிதரா ரொருவருக்கும்
மறைமொழிசெவிக்கொளார் வினவார்வெறுப்பிலா
வார்த்தையவை யிற்குறிப்பார்
மிகவிளைஞரினமுளா ரென்னவிகழாரவர்
விரும்பாத வார்த்தையோதார்
மேன்மையுடையோம்பழமை யுடையோமெனக்கொ
வேந்தரைச் சேர்ந்தொழுகுவார் [ளார்
சகலாகமத்துணிவு நீயேயெனையனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (எ0)

## குறிப்பறிதல்.

* மாலணியெலாக்கொளுங் கூறுதறிந்தவரை
வையமிறை நினைவையறிவார்
வானகத்தெய்வமொப் பென்னலாமவர்மன
மதித்தபொருளை துமடைவார்
கோலவிழியாலுருவி னுற்பெரும்பயனுட்
குறித்தறிந் துணருமதியார்
கோதறுமனப்பளிங் காலுளப்பொருளைக்
குறிப்பா லெடுத்தாளுவார்

* மால்=பெரிய

நீலவிழிநிலையறி யமைச்சராமவர்களால்
நேராரு நட்பாளராம்
நீதிபரவைக்குறிப் பறிவாரிறைக்குமுன்
னிற்றலே நன்றென்பர்காண்
சாலவுனைநம்பினே னலமணிகண்டனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எக)

## அவையறிதல்.

அவையறிந்தாராய்ந்து சொல்லுவார்சொற்றொகை
அறிந்தார்சொ னடையுமறிவார்
அறிவாளர்முன்னரறி வாளராவார்கணல்
லடக்கமு மொழுக்கமுடையார்
நவைதருமறிந்தார் சவைக்கணேகல்லார்
நலம்பேச லறிவதறிவார்
நல்லவைசொலற்சென்னல் விளைதருவயற்றலை
நனைந்த தென்னவோங்கும்
சுவையுதவுமாசிலா ருறுமரங்கேறினல்
தூயதாங் கல்விமிகுமால்
துற்சவையிலணுகாமை தன்னினமிலார்களவை
சொல்லாமை யவையறிதலாம்
சவையினடமிடுபத சரோருகவினோதனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எ௨)

## அவையஞ்சாமை.

பெரியாரவைக்கணே சொற்றொகையறிந்துசொற்
பிழைபடா தவராரங்கம்
பேசியன்னவரான் மதித்தறிந்தவனெனும்
பேர்பெறுபவர் மிக்கவறிவார்
தரியலரிடத்துமஞ் சாதுசாவாரெளிது
சவையிலஞ் சார்களரிதே
சௌரியமிலானுக்கு வாளிலென்பயனஞ்
சவைக்கஞ்சு வோர்க்குநூலால்
வருபயனிலாமையால் சொன்னிலையறிந்தவன்
மாற்றல ரிடத்துமஞ்சான
வல்லாரவைச்சொலச் செல்வனஞ்சானிலான்
மாண்டா னெனப்புகல்வர்காண்
சருவநற்சாக்ஷியே யன்பருட்காட்சியே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எஈ)

## நாடு.

தள்ளாவிளைப்பொருளு முழவருஞ்செல்வருந்
தக்காரு முள்ளதாகி
தன்னையிச்சிக்குநல் வளமையும்பிறநாடு
தாங்கும் பெருந்தகைத்தாய்
எள்ளாப்பசிப்பிணி பகைக்கொலைகுறும்பாக
மில்லாவ ளத்தவாகி
என்றுமொருநிலைமையாய் நீருமலைமலையருவி
இழிதரு மருங்குள்ளதாய்

கொள்ளாதவறுமைநிரை செல்வமும்பயிர்விளைவு
குன்றாத காவலுளதாய்
கோணாதுமன்பதைக் கெல்லாநலந்தருங்
கோலுளது நாடென்பர்காண்
தள்ளாமனல்லரு டருங்கருணைவாரியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எசு)

அரண்.

மணிநீருமண்ணுமலை யுங்காடுமுடையதாய்
வட்கா ரமர்க்குமிகையாய்
வலியகலமுயர்வருமை யுள்ளதாய்பகைவர்கள்
வரப்பெறாத் தகையுடைத்தாய்
துணிவீரருடனெலாப் பொருளுமுளதாய்ப்புறஞ்
சூழ்ந்தெவரு மணுகவரிதாய்த்
துய்க்குமுணவுளதாகி காப்பிடஞ்சிறிதாகித்
தோன்றிட மகன்றுள்ளதாய்
அணியகிகமொடுபுறஞ் சூழ்ந்தார்க்கிடந்தரா
தகமுளார்க் குரிமையுளதாய்
அமரிடமிகற்சாய வீறெய்திநிற்பதே
அரணென் றுரைப்பர்நூலோர்
தணிமோகரின்பாச முண்ணவருளீசனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எகூ)

படைமாட்சி.

தந்திமுதலானநால் வகைசேனையிறையவர்
தனங்களிற் றலைமையதுதான்
தாக்குமஞ்சாதமுது படைசுத்தவீரமே
சௌரியம தாலியமனும்
வந்தமர்தொடங்கினும் புறமுறுதெதிர்நின்று
வலிமையாற் றுக்குமனமு
மானநல்வழிசெல்ல நம்பிக்கையுட்கா
வகைக்கொண்ட திறமுமுண்டாய்
பந்தமுந்தியதூசு படையணியலைத்தநிக
பதிவழி நடந்துபொலிவாய்ப்
பலவலங்காரப்ப தாகைவாத்தியமுளது
படைமாட்சி வகையென்பர்காண்
சந்ததமுனைத்தொழுஞ் சிந்தையுறையெந்தையே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எசு)

பொருள்செயல்வகை.

இல்லாரையெள்ளுமே செல்வரைசிறப்பா
யெடுத்தினிது பாராட்டுமே
ஏதமுடையாரையும திக்கச்செயும்பகை
இருட்கொரு விளக்கமாகும்
* நல்லாறெழும்பொரு ளறத்தையின்பத்தைதன்
ஞட்டத்தை மெய்யையுதவும்
நாதனில்லாதபொருள் சுங்கப்பொருட்டிறை
நடைப்பொரு ளிறைப்பொருளதாம்

* ஆறு = வழி.

வல்லாளனுக்குமொரு பொருளெலாக்கருமமும்
வருத்தமில் லாமலாக்கும்
மன்னருட்குழவியை யன்பால்வரும்பொருள்
வளர்க்கு மிது பொருள்செய்கையாம்
* சல்லாரியாயினுங் கடைக்கணித்தாண்டவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எஎ)

படைச்செருக்கு.

தேராரெமக்கிறைமுன் னில்லன்மினின்றவர்
சிலைப்படிவ மாவரென்பார்
சிந்துரமெயும்படை பிடித்திகலருற்றநோய்
தீரத்தெ ளிந்துநிற்பார்
போராடிபுண்படா நாளெலாம்வீணென்ன
புகலுவா ரமரிலிறுவார்
பொங்கிசைவிரும்பியுயி ரீவார்க் † கழற்கழலை
பொற்பணி யெனக்காட்டுவார்
வாராவிகற்கண்டு கோவிப்பர்நிறைசின
மனங்கொளா ர் வீரமகலார்
மகிபன்கணீருக விறப்பாரமர்க்களம்
வளப்படை செருக்கென்பர்காண்
தாராயெனத்தொண்ட ரோதவருணுதனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எஅ)

---

* சல்லாரி = அபாத்திரன்.
† கழற்கழல் = பா... திலணியும் வீரகண்டை

## நட்பு

அறிவுடையமேலோ ரினக்கேண்மையா துலகில்
அரியதி லெலாமரியதாம்
அகமுகமலர்ச்சியுண் டாக்கும்பகைத்தவர்கள்
அவமதிப் பாற்றுமதியாம்
பிறைமதியெனப்பொலியு நாளுக்குநாளறிவு
பேதங்கெடுத் துயர்த்தும்
பின்றுணையிருந்துவரு துன்பத்தையுண்டுப்
பிறங்குமொத் துடனிருந்தே
குறைமொழிவரப்பெறு தனதாடையரையில்
குலைந்தவன் கையினுதவும்
கோணுதொநாளுமொரு வண்ணமாய்ப்பிறியாது
குலவலே நட்பென்பர்காண்
* சறுதாகமானவறு முகவற்பயந்தவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (எசு)

## நட்பாராய்தல்.

குணங்கொண்டுளாரென்ன பழியஞ்சுவாரென்னக்
குடியிற் பிறந்தாரெனக்
குற்றமடையாரென்ன நன்றியறிவாரென்னக்
கோபமுங் கொள்ளாரென
மணங்கொண்டகீர்த்தியுடை யாரென்னகருணையொடு
மானமிக வுடையாரென
வஞ்சகமிலாரென்ன நட்பாளருக்கிறுதி
வருமிடம் பிறியாரென

---

சறுசாகம் = வேங்கைமரம்.

இணங்குகுணமுளரென்ன கேட்டிலுறுதிக்கொண்
டிருக்குநட் பிவர்களென்ன
இழிந்ததுசெயாரென்ன கூடாமுனறிவாய்ந்
திசைந்ததே நட்பென்பர்காண்
தணந்தாண்மணந்திடங் கொண்டபரமேட்டியே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அ0)

## பழமை.

நட்பினதுவுரிமையே யென்றுமொருகுறைவற
நடத்தலும் யினிமையுருவ
நாட்டலுஞ்செய்தவகை கண்டறிந்ததிலிரு
நலந்தரத் தான்செய்தலும்
கொட்புறுவினைக்கேண்மை யோர்புரியினும்பிறொரு
குறைசொலா தின்புறுதலும்
குறியாவினைப்புரியி னும்விடினுமழிவினைக்
கொளைத்தரினும் விடலின்மையும்
உட்பகையுளார்க்கே ளிழுக்கமிற்றெனவந்
துரைத்தாலு மறியாமையும்
உலகமும்பகைவரு மிச்சிக்கமுன்கேண்மை
உள்ளலும் பழமையென்பார்
* தட்பவனலங்கொளா ருட்புலனிறைந்தவா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அக)

---

* தட்பம் = சாந்தம். அனலம் = கோபம்.

## தீநட்பு.

வார்த்தையொருவகைபேசி மனதிலொருவகையாக
வைத்திருப் பார்கணேசம்
வருபயனினைந்துகள் வரைவேசியரையொத்து
வஞ்சமுடை யார்கணேசம
போர்க்களங்கண்டஞ்சி தனியாகவிட்டோடி
போவார்க டங்கணேசம்
பொய்ச்சான்றுரைப்பார்கள் கள்ளுண்டுதிரிவார்கள்
பொல்லார்க டங்கணேசம்
சீர்த்தியுறுநாளணுகி கைவரண்டின்மையாங்
கேடிலணு கார்கணேசம்
கிட்டிமனையுளிவந்து தூறுசிறியார்நேசம்
கீழ்மக்க ணேசமென்பார்
* தார்த்தைவருஞ்சடா மகுடப்ரதாபனை
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௮௨)

## கூடாநட்பு.

முகமலர்ந்தகமலர்வி லாதவர்கணேசமும்
மோசமுடை யார்நேசமும்
முதுநூலறிந்தவர்க ளாணுலுமொருபகை
முனைக்கொண்ட சிறுநேசமும்
அகமொருவிதத்திலு மொவ்வார்கணேசமும்
அற்பநெஞ் சினர்நேசமும்
அங்கையிற்கும்பிட்டு கண்ணீரிறைத்துகொல
வாயுதமு ளார்நேசமும்

* ார்மையவரல் = பூமாலை அணை நல்

சகநகைசெயும்படி நடப்பவாகணேசமும்
சத்ருசங் காரமுயலால்
* சானகமெனக்குனிந் தெய்வார்கணேசமும்
சாரலா காதென்பர்காண்
தகரவளகக்கொடி யிடங்கொண்டகத்தனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அரு)

## பேதமை.

நாணமைகுறைகண்டு வருபொருளிலாமைசயது
நண்ணமை யறிவிலாமை
நல்லறிவுணர்ந்துபல நூல்கற்றடங்காத
ஞானமஞ் ஞானமுடைமை
வீணைசகொண்டடைய வொண்ணுதவத்துவில்
விருப்புடைமை குற்றமுடைமை
வெறியுடையகள்ளுண் செம்மாப்பெனப்பொருள்
விழைநதே யழிந்தகயமை
பேணுதபொருளைப் பிறர்க்கொளவினத்தவாகல்
பெரியபசி கொண்டவுடைமை
பின்னெழுபிறப்புமள றிற்புகுமறத்திறமை
பேதமை யெனப்புகல்வர்காண்
சாணங்குழிக்கிறை சரிப்பவமகற்றுவோய்
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அசா)

---

சானகம் = வில்

## புல்லறிவாண்மை.

வையாதுபொருளின்மை யின்மையாயுலகறிவு
மாண்பிலா தின்மையெனுமா
மயலுளார்க்கைப்பொருளை வாங்குவார்தவமென்னு
மற்றவர்க டாந்தம்மையே
நையாவியற்றுவினை பகையும்பொருறதென்னு
நல்லறு மென்பதவர்கள்
நாமமாங்கல்லாத நூலறிந்தாமெனும்
நடந்தநூற் கையுறுமெனும்
செய்யாவினைத்தானு மேவலாலும்புரிய
தேராதெனும்பெரியரால்
சீரென்னமாறெனுந் தனதுபுல்லறிவாண்மை
தெரிவிக்கு மென்பவாமேலா
சையோககரணந் தருங்கருணையாதியே
சாந்தானி ராமலிங்கன்
தநதுதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென்கைலாயனே. (அரு)

## இகல்.

சீவர்களெவர்க்குமிகு மாறுபாடென்பதே
தீராதநோய் வெறுப்பைச்
செய்தாலுமிகலொன்று செய்யாமையாற்புகழ்
செழிக்குஞ் சுகங்கொடுக்கும்
யாவரிகலில்லாரை வெல்வாராதுள்ளவர்க்
காக்கமுண் டாகியழியும்
அஞ்சியெதிர்சாய்தலே செல்வமாமேற்கொள்ள
அழிவாகு நீதியுதியா

தாவிலாச்செல்வமுறு காலையிகல்காண்கிலார்
சாயுநாள் கண்டுநைவார்
தள்ளுவதிகற்றுன்ப மென்னினட்பென்றுந்
தரும்பெரிய வின்பமென்பார்
தாவிடபவூர்தியி லெழுந்தருளதீதனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அசு)

பகைமாட்சி.

வலியார்முனெதிராது மெலியார்பகைகொண்டு
வருவதுந் துணையுமன்பும்
வல்லபமிகுத்தலு மஞ்சுதலிலாமையும்
மனவுறுதி யானநிலையும்
நலியாவுதாரகுண மாதலுந்தாமதமு
நசையு மில்லாதமதியும்
நான்மறையறிந்தவழி செய்துபழியஞ்சிவரு
ஞானமெய்த் திடவுள்ளமும்
மலிவாயகேள்வியுங் கல்வியறியாரையும்
மனுத்தரும மறியாரையும்
மாறுதுசெய்தவரை காலந்தெரிந்துவெலு
மாட்சியே பகைமாட்சியாம்
சலியாதகருணாக ராசருவபூரணா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அஎ)

பகைத்திறந்தெரிதல்.

வேண்டப்படான்பகையெனைத்துமொருபொருளினும்
விளையாட்டிடத்துமதனால்
வெய்யவில்லேருழவர் பகையாகினுஞ்சொலால்
வெல்பவர் பகைக்கொண்டிடார்
நீண்டவுலகம்பகைமை யுறவாகவுடையவனை
நேசிக்கு மென்பதறிவான்
நேராரிலான்தனியி லான்துணையிலான்றன்னை
நேசியார்க் குற்றதுரையான்
பூண்டவினையாற்றனைக் காப்பவன்பகைவரால்
பொன்றான் முளைமரத்தைப்
பூமிவெளிவருமுனே யுகிராற்களைந்தவா
பொருபகைத் திறமறிவனால்
தாண்டவம்புரிபரம சங்கரசதாசிவா
சாந்தானி ராமலிங்கன்
தத்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (அஅ)

உட்பகை.

வெட்டுமணிவாள்கொண்டு வருபகைமுனிற்கலாம்
வெய்யகன லொடுபழகலாம்
விடநாகமொடுகூடி யாடலாஞ்செப்பினை
விளங்கப் பொருத்திவிடலாம்
கெட்டநோயுண்டாக்கு நிழனீரைபருகிவரு
கேதங் கெடுத்துய்யலாம்
கிரித்தெரெஃகத் தரத்தோடுமுறையலாங்
* கிரிபேசு மவரையுறலாம்

---

* கிரி—பேரம்.

இட்டமுளரானாலு முறவினர்களானாலும்
இனவடிய ரென்பரேனும்
எட்பகவறச்சிறிய வுட்பகையுளாருற
விருத்த லாகாதென்பர்காண்
சட்டியிற்கொக்கட வருங்குகன்றாதையே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௮௯)

## பெரியாரைப்பிழையாமை.

தெரியாதவொன்றிலாப் பூரணவிவேகராய்ச்
செய்பவை யெலாஞ்செய்வராய்த்
தேற்றமிக்குடையராய்த் தவவலிமைவிரதவலி
செல்வரா யுள்ளநல்ல
பெரியாரையொருபிழை யுரைக்கமனதெண்ணினார்
பேசினார் புயவலிமையும்
பேரும்பெருந்தகைய வாழ்வுஞ்சிறப்பும்
பிறப்பு மொன்றில்லையாகி
எரிவாய்ப்படும்பஞ்ச தாகிக்கொளுங்கொடிய
வமன்கை யுயிருமாகி
இந்த்ரனென்றாலுமிக மெல்லாம்புரக்குமிறை
என்றாலு மாய்வனென்பார்
சரியேற்றமறிவரிய சச்சிதாநந்தமே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௯௰)

## பெண்வழிச்சேரல்.

நாணுடையபெண்வழி நடப்பவர்க்கெப்பொழுது
நற்றரும மென்பதில்லை
நல்லார்விருந்தினரை யுபசரித்தமுதுதவு
ஞாயமொரு போதுமில்லை
மானுடைமையில்லையொரு பெருமையிலைமேலான
வழிசெல்லு மதியுமில்லை
மாந்தருட்கனமுடைய வாண்மையிலைநட்பினர்
வருத்தந் தணிப்பதில்லை
நீணிதியிருந்தாலு நன்கில்லைசெய்தொழில்
நிறக்காது கீர்த்தியில்லை
நேர்ந்தனுபவிக்குமொரு சுகமில்லையிகமில்லை
நேயபுரு டார்த்தமில்லை
தாணுவேசருவபரி பூரணசுயம்புவே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூக)

## வரைவின்மகளிர்.

ஆசையனுவளவேனு மில்லாதுகையில்வரும்
அத்தமே நோக்கமுடையார்
ஆவாரிஞரென்று மாகாரிஞரென்றும்
அறிவிற் குறிக்கவறியார்
நேசநெஞ்சில்லாது புல்லலாவிருளுள்ள
நீசப் பிணத்தையொப்பார்
நிதிவரண்டான்முன்னை நலமொன்றமுணராது
நிட்டூர வார்த்தைசொல்வார்

வேசையர்களவரின்ப மின்பெண்ணநண்பா
விரும்பா ரறிந்தமுதியோர்
விழைவார்வருந்துவார் அறிவதுபுறம்போய
வீணரென் றேதுமுது நூல்
சாசுவதமானபர வத்துவெனுமுத்தனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூ௨)

## கள்ளுண்ணாமை.

உண்டவர்கள்கட்காதல் கொண்டவரடுத்தவர்கள்
உற்றவர்க ளல்லசபையில்
ஒருவராயெண்ணப் படார்வெட்கமில்லார்
உறங்கினு ருயிருமில்லார்
கண்டவர்சிரிக்குநிலை யுடையார்வரம்பிலார்
கடுவுண்ணு மவரையொப்பார்
கள்ளுண்டவர்க்கறிவு றுத்தனீருள்ளானைக்
கைவிளக்காற் றுருவலாம்
கொண்டவன்பகலாத பெற்றதாய்முன்னுங்
குணங்கொளா ருலகமதியார்
கோடன்மெய்ம்மறதியே யுண்டாகுமென்றால்
குறிக்காத் திறத்ததென்பார்
சண்டனைக்காலா லுதைத்தருள்புரிந்தவா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூ௩)

சூ து.

சூதுபொல்லாதுவெண் டாமைவெல்வானுமீன்
தூண்டிலை விழுங்கலொப்பான்
தோற்றபொருணூறுவர வொன்றுதலான்மிக்க
துயரமொடு வறுமையாக்கும்
தீதாய்ப்பலச்சிறுமை செய்துபெருமைப்போக்கி
சீரழிக் குங்கெடுக்கும்
* சேட்டையவனிடமுலவு மகடனதுமவியாத
செல்வமுறு மருளவிக்கும்
நீதிபுகழற்றூர்ந்த வுடையற்றுகல்வியு
நிதானமொடு தானமற்று
நிதியற்றுபொய்யுலவி தெருளுமற்றிம்மைநல
நேராத ழிக்குமென்பார்
தாதகிமிலைந்தசடை யுடையவிடைநாதனே
சாந்தானி ராமலிங்கன்
தத்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கச)

ம ரு ந் து.

செயலுணவுமிகுதலுங் குறைதலுமிலாமலுஞ்
சீரண மறிந்துண்டலும்
தேகநிலைகண்டதற் கொத்தவுணவுங்கால
சீரொடு பொசிக்குமதியும்
வியநிலையிருந்தவுண விற்றெனவறிந்தது
விருப்போ டமர்ந்திருந்தே
மிதவுண்டிகொள்ளலுஞ் சீரணமிலாவுணவை
விழையாத கற்றிவிடலும்

* சேட்டை = மூதேவி.

சயவாதபித்தமுறு சீரகந்தேறலும்
தருமருந் தோடுபிணியைத்
தப்பாமலறிதலு மின்னுன்குமொத்ததே
தனிமருந் தாமென்பர்காண்
தபவாகரங்கொண் டிலங்குபரிபூரணு
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூரு)

## ஒழிபியல்.

### குடிமை.

நிலைமையுமொழுக்கமு மலர்வதனசெம்மையுந்
நேசம் பொருந்துமதியும்
நிதிபெற்றுயர்ந்தாலு மதியழிவினைச்செயா
நியமமிகு பெரியவறிவும்
கலைமதிகளங்கமெனு மறிவுமின்சொல்லுமெதிர்
கண்டவ மதிப்பின்மையும்
கனமதியுடன்றன்னி லுள்ளதைக்கரவாது
கையேற்ற வர்க்கீதலும்
குலமிகுவணக்கமுந் நலமலியுநாணமும்
கொண்டுலக ருக்குமமுதாய்க்
கோமளசுகந்தமா யுள்ளமகனேநல்ல
குடிப்பிறந் தானென்பர்காண்
தலைமையாகிச்சரா சரவகநிறைந்தவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (கூசா

## மானம்.

தங்குடிக்கொவ்வாத விழிதொழிலையுஞ்செயார்
 தாழ்வான வினையைவிடுவார்
தனமுற்றகாலையிற் பணிவாரிலாதவழி
 தளரா திருந்துலவுவார்
பொங்கவமதிப்புளார் பின்செலார்மதியார்
 பொலன்கடை மிதிக்கவறியார்
புகழிழந்தாலுயி ரிறப்பார்கள் கவரிமான்
 புத்தியெனு முத்திகொண்டே
பைங்கனகமேருவெனு நற்குடிபிறந்துமொரு
 பழிவினை யெடுத்துமுயலார்
பாவியிவனென்னுமொரு நாமமும் பூமியிற்
 படையார்கண் மானமுடையார்
சங்கரசுயம்புசிவ சம்புவேதாணுவே
 சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
 சாமிதென் கைலாயனே. (கள)

## பெருமை.

தாரணியின்மக்கட் பிறப்பெலாமொத்துளது
 தாழ்வுயர் விரண்டுமொவ்வா
தத்தமது கருமவகை யாலென்பதான்மனந்
 தளரா வெழுச்சியுடையார்
சீரணவுகற்புடைய மகளிரைப்போலச்
 சிறப்புடைய ரருமைசெய்வார்
சீரியரிடங்கண்டு சேருவாரென்றுஞ்
 செருக்கிலா நெஞ்சமுடையார்

பூரணகனங்கொண்ட நாளினும்பணிவார்
புறம்பேசி யுலவவறியார்
புத்திமிகுமேலாய வழிகொண்டிருக்கின்ற
புண்ணிய ரெனப்புகல்வர்காண்
*சாரணஞ்செய்யவல சருவசங்காரனே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே (௬அ)

## சான்றாண்மை.

அன்புநாணொப்புரவு கணோட்டமெய்யென்னு
மைந்துமே சான்றாண்மையாம்
ஆதாரந்தாங்குதூ ணாதலானற்குணம்
அகங்கொண்டு நன்மைசெய்து
தன்கருமமுற்றாக பணிவெனும்படைகொண்டு
சத்துரு சயங்கொண்டிடு
தருபவர்க்கின்பமே செய்துதோல்விக்கொண்டு
சால்பிற் குரைக்கலொத்துப்
பின்பொழுதுமாறினு மதன்றகமைகுன்றாத
பெற்றியாய் வறுமையிலதாய்ப்
பெரியபூமிக்குறுதி யாயிருக்கின்றது
பெருந்தகமை நிலையென்பர்காண்
தன்பெருமையறியாத வென்பெரியதெய்வமே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௬௯)

---

* சாரணம் = உலகங்களை பஸ்பமாக்கல்

பண்புடைமை.

எளியசமயத்தனு யாராரிடத்தினும்
இருந்தன்பு குடிபிறப்பாம்
இவ்விரண்டுளனுகி நல்லார்குணந்தனக்
கீடாகி நீதி தருமத்
தெளிவுடையனெனவுலகு புகழச்செனித்துச்
சிரிப்பினு மகிழ்ச்சியிலனுய்த்
திரிகாலமும்புவன மழிவுறுவாதரச்
செல்வனு யறிவிலார்க்கின்
னளியால்குணந்தேரு நட்புடைமையாலென்றும்
அல்லிலா வொளியுள்ளனுய்
ஆக்கம்பெருத்துப் பயன்படவிருக்குமதி
யாளனே பண்புடையனும்
*தளியினுமகண்டபர வெளியினுநிறைந்தவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௱)

நன்றியில்செல்வம்.

தனந்தேடியுண்ணு திறந்தானெனப்புவி
சரித்தவன் பெற்றசெல்வம்
தருமசிந்தனையொன்று மில்லாதுபுகழையு ம்
சாராதிருந்த செல்வம்
மனந்தேடியொருவருந் தனையிச்சியாதபடி
வாழ்ந்துண்டி ருந்தசெல்வம்
வடிவுடையபெண்மண மிலாதுகிழமுற்றென
வழங்கா திருந்தசெல்வம்

---

* தளி = ஆலயம்.

இனந்தேடியிச்சிக்க வியலாமலூர்நடுவின்
எட்டியி னிருந்தசெல்லம்
ஈரமற்றோயாது தேடியபெருஞ்செல்வம்
இவைநன்றி யிற்செல்வமாம்
சனந்தேடவுட்புற மிருந்தொளிசெய்யாதவா
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௱க)

## நாணுடைமை.

குலமகளிர்நாணல்ல நன்மக்கணாணமே
கொள்வரிழி கருமநினைவால்
கூறையுணவெல்லா வுயிர்க்கும்பொதுக்குணம்
கொண்டவர் சிறப்புநாணும்
நலமுணர்விலாதவரு டம்புவிடலாகலார்
நாணமக லாதுவாழ்வார்
நாணமணியாந்தனது பழிபிறர்ப்பழிகண்டு
நாணுவா ரான்றமதியோர்
நிலைநாணிலாதவன் பழிபாவமாற்றுவான்
நிறைகுண வொழுக்கமெல்லா
நீத்தவன்றனை மரப்பாவைநாணால்
நிகழ்ந்த வகையாமென்பர்காண்
தலையிலங்கணிமாலை சூடியவிநோதனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௱உ)

## குடிசெயல்வகை.

உடம்பைவருந்துன்பங் கொளுங்கலமதாக்கொண்
டுளானறி வகன்றிருப்பான்
ஊக்கமுடையான்கரும முடியாதுகைவிடான்
னுளமுயல் வெனப்பொறுப்பான்
திடங்கொண்டபோரிலெழு வீரனிவனெனவே
திறம்பா திருந்தாற்றுவான்
தெய்வநலமுண்டாகி யுலகுபுகழுண்டாகி
செல்வனு யாண்டன்மையாய்க்
குடும்பபாரந்தலைக் கொண்டிருப்பான்வேறு
குற்றமறி யான்குடித்தான்
கோடரியெனுந்துன்ப மடுமெனவுயர்த்துவான்
குடிசெயல் வகைக்கொண்டுளான்
சடங்கொண்டசீவப் பயிர்க்குதவுமேகமே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதிபுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௱௫)

## உழவு.

தலைமையாயுள்ளத் தொழிற்கெலாமுள்ளதெது
சார்ந்தவரை யேந்தலேது
சகவிரதமென்பதற் கச்சாணியென்பதெது
தாழாது வாழ்வதேது
பலகவிகைநீழறன் னொருகவிகைநீழற்
படைப்பதே திறவாதெது
பலநிலப்புழுதிகாற் பலநிலப்புழுதியாய்ப்
பயிர்செய்து காத்துசேர்த்து

உலகம்புரப்பதெது விளைநிலத்தோடென்று
முறவாகி நிற்பதேது
உணவாயிருந்தமுத மாகியுளதேததனை
உழவென்று சொல்வர்நல்லோர்
சலனமில்லாதபத நீழலருளெந்தையே
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௯௪)

நல்குரவு.

தரித்திரமெனும்பாவி யிம்மைமறுமைப்பயன்
றாரான் பழங்குடிப்பேர்
தன்னையுஞ்சொல்லையும் போக்குவான்குடியிற்
சனித்தார்சொ லிழிவுசெய்வான்
பரித்ததுன்பிற்றுன் பியற்றுவான்சொல்லிற்
பயன்படா வாறுபுரிவான்
பத்துமாதஞ்சுமந் தீன்றதாயுங்கணாற்
பார்க்கப்ப டாதுசெய்வான்
எரித்துஞ்சினுமிதில் துஞ்சப்படாதென
வியற்றுவான் கொடுமைசெய்வான்
என்றுவிடுமோவெனவு மஞ்சச்செய்வானிவன்
எவர்க்குமாகாது கண்டாய்
சரித்துண்டுறங்குபவ சாகரமகற்றுவோய்
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௯௫)

## இரவு.

கரவாதளிப்பவரிடத் திரந்துண்ணலாங்
கண்டிரவலர்க் கொழித்தால்
கலியுளார்பழியலவு தாரகுணமுள்ளவர்க்
கைப்பொருளி லின்பமதனால்
இரவாதளிப்பவர்க் கொப்பாரிறந்தவர்க்
கினிமையுட னழகுமுதவும்
ஏற்பவர்களுள்ளதா லீவார்க்குறும்புகழ்
இருப்ப திரவுலகிலுளது
வரவாகிச்செல்வாத லெந்திரப்பாவையா
மண்கணிர வாளரிலேயேல்
வள்ளலாலின்பமாம் வெகுளாதிரக்குமொரு
மனிதரா லென்றுபுகல்வார்
*சரவாகையாய்நகை செயுந்திரிபுராந்தகா
சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென்கைலாயனே. (௱௬)

## இரவச்சம்.

ஏற்பதிழிவாதலா லொழியாதளிப்பவர்
இடத்து மிரவாமைநலனும்
இரணியகருப்பனே யின்றேகெடக்கடவன்
என்பரிர வாளரதனால்
† பாற்பகுதியால் வருமையுற்றாருமிரவாத
பண்புடையமை யேபெருமையாம்
பசுவிற்கு நீரென் றிரந்தாலுநாவிற்குப்
பழிவரும் பாவமாகும்

* சரவாகை = வெற்றியுள அம்பு
† பால் = ஊழ்

நோற்பவரளிப்பவ ரிடஞ்செல்லலாமிரவின்
நுண்மையை நினைக்கவுருகும்
நொய்யருக்கிலையென்னி லுயிர்போமுயற்சிகூழ்
நுவலருந் தேவருணவாம்
சாற்புவனமெங்கணு நிறைந்தபரிபூரணு
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௭௭)

கயமை.

நாங்கண்டிலோமிவர்க் கொப்பிந்தவுலகென்ன
நல்லாருரைக் குமாக்கள்
நன்றிபுகழறியாது பழிபாவமஞ்சாது
நடையிலிரு மாந்துவாழ்வார்
தாங்கண்டதுலகறிய வோதுவார்தானந்
தவங்கண்டிலாத கையார்
தண்டிப்பவர்க்கீழ் பணிந்தீவரச் சமொடு
சாந்தமாசாரமில்லார்
பாங்குடையரைக்காணி லுட்பொருதெண்ணிப்
பதைப்பார்க டின்பமுற்றால்
பரிவாயெழுந்துவிலை கூறுவார்தம்மையிப்
பதடிகளைக் கயவரென்பார்
தாங்கண்டபுவனத் தெலாம்வல்லகத்தனே
சாந்தானி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
சாமிதென் கைலாயனே. (௭அ)

## வாழி.

புரணமாயுலகுயி ரெலாமாயகடவுடன்
　　பொற்பாத மலர்வாழியே
பூதலத்தெவ்வளமு மாகமதிமும்மாரி
　　பொழிமேக மதுவாழியே
சரணமென்றதுவாகி யறிவாறிநிற்கின்ற
　　சாந்தவந் தணர்வாழியே
தருவேவந்தியில்லறந் துறவறநெறித்தவஞ்
　　சாதிக்கு மவர்வாழியே
அரணமாதியநிதிய விறைவாழியின்பநல
　　வனுபவ முளார்வாழியே
அரியவிச்சதகமாம் பாட்டுடைத்தலைவனிவ்
　　வம்புவியி னனிவாழியே
தருணமாதிடமேவு பரமனீவாழியே
　　சாந்தாணி ராமலிங்கன்
தந்துதியுவந்தசீ காளத்திநாதசிவ
　　சாமிதென் கைலாயனே. (அ0)

திருக்குறள் விளக்கமென்னும்

தென்கைலாய சதகம்

முற்றிற்று.

---

# శ్రీ తాళపురినిలయ
# శ్రీకాళహస్తీశ్వరాష్టకం.

జ్ఞానాంబికా హృదయపంకజ భాస్కరాయ ।
జ్ఞానప్రియాయ భవరోగనివారకాయ ।
గంగాధరాయ గజదైత్య విమర్దనాయ ।
శ్రీతాళపుర్యుపగతాయ నమశ్శివాయ॥ ౧

విశ్వేశ్వరాయ నరకార్ణవతారణాయ ।
జ్ఞానిప్రియాయ కరుణామృతసాగరాయ ।
శ్రీకాళహస్తినిలయాయ పరాత్పరాయ ।
శ్రీతాళపుర్యుపగతాయ నమశ్శివాయ॥ ౨

భక్తప్రియాయ భవరోగనివారకాయ ।
కామాంతకాయ కమలాసనపూజితాయ ।
నేత్రత్రయాయ శుభలక్షణలక్షితాయ ।
శ్రీతాళపుర్యుపగతాయ నమశ్శివాయ॥ 3

పంచాననాయ ఫణిరాజవిభూషణాయ ।
భక్తాపవర్గఫలదాయ మహేశ్వరాయ ।
కాష్ఠాంశుకాయ భువనత్రయవందితాయ ।
శ్రీతాళపుర్యుపగతాయ నమశ్శివాయ॥ ౪

చర్మాంబరాయ శశిఖండవిభూషణాయ ।
ఫాలేక్షణాయ ఫణికుండలమండితాయ ।
ఆనందతాండవకృతే వృషభధ్వజాయ ।
శ్రీకాళహస్తి నిలయాయ నమశ్శివాయ॥ ౫

ముక్తాయ యజ్ఞఫలదాయ గణాధిపాయ ,
గీతప్రియాయ హరిముఖ్యసురాశ్రయాయ ।
మాతంగచర్మవసనాయ జటాధరాయ ।
శ్రీకాళహస్తినిలయాయ నమశ్శివాయ ॥

కాంచీపురేసుమహితేచ పిలాసపూర్వే ।
దేవర్షిబృందపరిపూజిత పాదుకాయ ।
కాంతావిభక్తనిజవామ శరీరకాయ ।
శ్రీకాళహస్తినిలయాయ నమశ్శివాయ॥

ఆశ్వీజపర్వ శశికోటిసమానకాంతిః ।
ఫల్లారవిందపరిశోభిత నేత్రకాంతిః ।
కర్పూరకుందధవళాయిత నైజకాంతిః ।
శ్రీకాళపుర్యాపగతోవతు చంద్రచూడః॥

శ్రీకాలహస్తీశ్వర శంకరాష్టకం ।
త్రికాలతస్తత్ పఠతేద్విజేంద్రాః ।
శ్రీకాళపుర్యాంవసతః కృతిఃపరా ।
శ్రీస్వామి నాథాఖ్యగురోశ్చకాసతే॥